# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## 2026 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2026.10.06 ஆந் திகதியன்று வெளியிடப்பட்டது)


# ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களைத் தடுத்தல்

நாடுகளுக்கிடையேயான ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களுக்கெதிரான ஐக்கிய நாடுகள் சமவாயத்துக்குப் பயன்கொடுப்பதற்கும்; பயனுள்ள தேசிய மற்றும் சர்வதேச ஒத்துழைப்பினூடாகப் பாரதூரமான குற்றச்செயல்களைத் தடுப்பதற்காகவும் புலனாய்வு செய்வதற்காகவும் மற்றும் அவற்றுக்கெதிராக குற்றவழக்குகளைத் தொடுப்பதற்காகவும் ஏற்பாடு செய்வதற்கும்; ஒழுங் கமைக்கப்பட்ட குற்றவியற் குழுக்களினால் ஏற்படுத்தப்படும் அச்சுறுத்தல் களிலிருந்து சமூகத்தைப் பாதுகாப்பதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்பு பட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 317.00 தபாற் செலவு : ரூபா 150.00

இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்

# பிரிவுகளின் தலைப்பு

*பிரிவு* *பக்க இல.*


| | | |
|---|---|---|
| | முன்னுரை | 1 |
| 1 | சுருக்கப் பெயர் | 2 |
| 2 | சட்டத்தின் குறிக்கோள்கள் | 2 |
| 3 | இச்சட்டத்தின் ஏற்புடைமை | 2 |


## பாகம் I

## தவறுகளும் தண்டங்களும்


| | | |
|---|---|---|
| 4 | ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியற் குழுவொன்றின் உறுப்பினரொருவராகவிருத்தல் | 4 |
| 5 | பாரதூரமான குற்றச்செயலொன்றைப் புரிய எத்தனித்தல், அதற்கு உடந்தையளித்தல் அல்லது சதிசெய்தல் | 7 |
| 6 | பொதுவான குற்றவியற் குறிக்கோளொன்றினை முன்னெடுப்பதில் செயலாற்றுதல் | 7 |
| 7 | புகலளித்தல் முதலியன | 9 |
| 8 | புலனாய்வுசெய்கின்ற அல்லது உதவிபுரிகின்ற ஆட்களுக்கு அச்சுறுத்தலை அல்லது தீங்கை விளைவித்தல் முதலியன | 10 |
| 9 | ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியற் குழுவொன்றுக்கான உறுப்பினர்களை ஆட்சேர்த்தல் | 11 |
| 10 | ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியற் குழுவொன்றில் பங்குபற்றுதல் | 11 |
| 11 | வளவுகளைப் பயன்படுத்துவதற்கு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியற் குழுவொன்றுக்கு அனுமதியளித்தல் | 12 |
| 12 | சூழ்ச்சிசெய்கின்ற செயற்பாடுகள் தொடர்பான தவறுகள் | 13 |
| 13 | ஆளொருவர் நிகழ்வொன்றுபற்றி அறிந்துள்ளாரென எப்போது சொல்லப்படுகின்றது | 15 |

| *பிரிவு* | | *பக்க இல.* |
|---|---|---|
| 14 | இச்சட்டத்தின்கீழான பாரதூரமான குற்றச்செயலொன்று தொடர்பான விடயத்தை வெளியிடுதல் | 16 |
| 15 | கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றினால் புரியப்பட்ட பாரதூரமான குற்றச்செயலொன்று | 17 |
| 16 | சட்ட ஆளொருவரின் சார்பில் மற்றும் முதலியனவற்றுக்கென செயலாற்றுகின்ற சிரேட்ட அலுவலரொருவருக்காக அச்சட்ட ஆள் பொறுப்பாதல் வேண்டும் | 18 |


பாகம் II

## புலனாய்வுகளும் குற்றவழக்குகளும்


| | | |
|---|---|---|
| 17 | நிறுத்துதல் மற்றும் தேடுதல் முதலியவற்றுக்கான தத்துவம் | 20 |
| 18 | கைதொன்று செய்யப்படும் போதான நடவடிக்கைமுறை முதலியன | 22 |
| 19 | கைதுபற்றிய அறிவிப்பு | 22 |
| 20 | நீதிவானொருவர் முன்னிலைக்குக் கொணருதல் | 24 |
| 21 | தடுத்துவைத்தற் கட்டளைகள் | 25 |
| 22 | தடுத்துவைத்தற் காலப்பகுதியை நீடித்தல் | 27 |
| 23 | சந்தேகநபர் பிணையில் விடுவிக்கப்படலாம் | 29 |
| 24 | மட்டுப்பாட்டுக் கட்டளைகள் | 29 |
| 25 | விளக்கமறியல் கட்டுக்காப்பின்போதான தடுப்புக்காவல் | 32 |
| 26 | விளக்கமறியலில் அல்லது தடுப்புக்காவலில் உள்ள சந்தேகநபர் சட்டத்தரணியொருவருக்கான அணுக்கத்தைக் கொண்டிருத்தல் | 35 |
| 27 | விளக்கம் முடிவுறும்வரையிலான தடுப்புக்காவல் | 35 |
| 28 | விசேட புலானாய்வுசார் தொழினுட்பங்களுக்கான நீதிமுறை அதிகாரவளிப்பு | 36 |
| 29 | கூட்டுப் புலனாய்வுகள் | 37 |
| 30 | நீதிவான் நீதிமன்றத்தின் முன்னரான வழக்கு நடவடிக்கைகள் | 38 |
| 31 | பாரதூரமான குற்றச்செயலொன்று பிடியாணையின்றிக் கைதுசெய்யத்தக்கதாக இருத்தலும் மேல் நீதிமன்றம் இச்சட்டத்தின்கீழான பாரதூரமான குற்றச்செயல்களை விளங்குதலும் | 38 |
| 32 | குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்புடைமை | 39 |

| *பிரிவு* | | *பக்க இல.* |
| --- | --- | --- |
| 33 | 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல்கள் சட்டத்தின் ஏற்புடைமை | 39 |
| 34 | குற்றவழக்குத்தொடுப்பு, காலத்தால் தடைசெய்யப்படுதலாகாது | 39 |
| 35 | பொருள்கோடல் | 40 |


## பாகம் III

## பொலிசு அலுவலரொருவருக்குள்ள தத்துவங்கள்


| | | |
| --- | --- | --- |
| 36 | இச்சட்டத்தின்கீழ் பொலிசு அலுவலரொருவருக்குள்ள தத்துவங்கள் | 40 |
| 37 | இச்சட்டத்தின்கீழான பாரதூரமான குற்றச்செயலொன்று புரியப்படுவதனைத் தடுப்பதற்குப் பொலிசு அலுவலருக்குள்ள கடமை | 40 |
| 38 | ஒரு வாகனம் அல்லது கலம் முதலியனவற்றை நிறுத்துவதற்கு வலோத்காரத்தைப் பயன்படுத்துதல் | 41 |
| 39 | ஏதேனும் வாகனம் அல்லது கலன் முதலியவற்றின் கட்டுப்பாட்டைக் கையேற்றல் | 41 |
| 40 | ஒரு கலன் அல்லது வானூர்தி முதலியன புறப்பட்டுச்செல்வதனை அல்லது கடலுக்குச் செல்வதனை இடைநிறுத்துதல் அல்லது தாமதித்தல் | 42 |
| 41 | அரசாங்கப் பகுப்பாய்வாளரொருவருக்கு அல்லது வேறு நிபுணருக்கு பொருட்களை நேரடியாகச் சமர்ப்பித்தல் | 43 |
| 42 | புலனாய்வுக்காக விடயப்பொருட்களைக் கைமாற்றுதல் | 43 |
| 43 | வங்கி, நிதிநிறுவனம் முதலியவற்றிலிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல் | 43 |
| 44 | சேவை வழங்குநரிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல் | 45 |
| 45 | தரவுளையும் தகவல்களையும் வெளிக்கொணர்தல் | 47 |


## பாகம் IV

## கூற்றுக்களின் ஏல்தகவு


| | | |
| --- | --- | --- |
| 46 | சான்றுக் கட்டளைச்சட்டத்தின் குறித்தசில ஏற்பாடுகள் ஏற்புடையற்பாலனவல்ல | 49 |
| 47 | சந்தேகநபரினால் கையொப்பமிடப்பட்ட கூற்று ஏல்தகவுடையதாதல் வேண்டும் | 49 |

| *பிரிவு* | | *பக்க இல.* |
|---|---|---|
| 48 | நீதிவானுக்கும் அடையாள அணிவகுப்பிலும் அளிக்கப்பட்ட குறித்தசில கூற்றுக்கள் ஏல்தகவுடையனவாதல் | 51 |
| 49 | குறித்தசில ஆவணங்களின் ஏல்தகவு | 52 |
| 50 | சான்றுக் கட்டளைச்சட்டத்தின் 54 ஆம் பிரிவு ஏற்புடையற்பாலதல்ல | 53 |
| 51 | பிரிவுகள் 46, 47, 48, மற்றும் 49 இன் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலாகாது | 53 |
| 52 | பொய்ச் சான்றளித்தல் | 54 |
| 53 | நீதிவானொருவருக்கு அளிக்கப்பட்ட கூற்றொன்றின் ஏல்தகவுக்காகத் திருப்திப்படுத்தப்படவேண்டிய முந்நிபந்னைகள் | 55 |


பாகம் V

## வெளிவிடுகையும் துப்புக்கொடுத்தலும்


| | | |
|---|---|---|
| 54 | தகவல்தருநரின் தகவல்ளையும் அடையாளத்தையும் வெளிவிடாமை | 55 |
| 55 | தகவல்தருநரொருவரினால் தகவல்கள் வெளிவிடப்படுதல் | 57 |
| 56 | துப்புக் கொடுத்தல் | 57 |


பாகம் VI

## பொது ஏற்பாடுகள்


| | | |
|---|---|---|
| 57 | இழப்பிக்கப்படுதல் | 59 |
| 58 | தண்டனையளித்தல் தொடர்பான விசேட ஏற்பாடுகள் | 60 |
| 59 | வழக்குக்கான பாதுகாப்பு | 61 |
| 60 | 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க. மீளவொப்படைத்தல் சட்டத்துக்கான திருத்தம் | 61 |
| 61 | சட்டத்திலுள்ள பாரதூரமான குற்றச்செயல்களுக்காக ஏற்பாடு செய்வனவாகக் கருதப்பட்ட அரசுகளுடன் ஏலவேயுள்ள மீளவொப்படைத்தல் ஒழுங்கேற்பாடுகள் | 61 |

| *பிரிவு* | | *பக்க இல.* |
|---|---|---|
| 62 | சட்டத்திலுள்ள பாரதூரமான குற்றச்செயல்கள் தொடர்பில் இலங்கைக்கும் குறித்தசில அரசுகளுக்குமிடையேயான மீளவொப்படைத்தல் ஒழுங்கேற்பாடொன்றாக அமைச்சர் சமவாயத்தைக் கருதலாம் | 62 |
| 63 | எந்த ஆட்களின் மீளவொப்டைத்தலுக்காகக் கோரிக்கையொன்று செய்யப்படுகின்றதோ அந்த ஆட்களுக்கெதிராக எடுக்கப்பட்ட வழிமுறைகள்பற்றிக் கோரிக்கைவிடுக்கின்ற அரசுக்கு அறிவிப்பதற்கு அமைச்சருக்குள்ள கடமை | 62 |
| 64 | அரசொன்றுக்கு உதவிபுரிதல் | 62 |
| 65 | தகவல்களை அளிப்பதற்கான சட்டக் கடப்பாடு | 63 |
| 66 | பொருள்கோடல் | 64 |
| 67 | ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கிநிற்றல் | 66 |

# ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களைத் தடுத்தல்

ச.வ.-ஓ. 10/2026

**நாடுகளுக்கிடையேயான ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களுக்கெதிரான ஐக்கிய நாடுகள் சமவாயத் துக்குப் பயன்கொடுப்பதற்கும்; பயனுள்ள தேசிய மற்றும் சர்வதேச ஒத்துழைப்பினூடாகப் பாரதூரமான குற்றச்செயல்களைத் தடுப்பதற்காகவும் புலனாய்வு செய்வதற்காகவும் மற்றும் அவற்றுக்கெதிராக குற்றவழக்கு களைத் தொடுப்பதற்காகவும் ஏற்பாடு செய்வதற்கும்; ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியற் குழுக்களினால் ஏற்படுத்தப்படும் அச்சுறுத்தல்களிலிருந்து சமூகத்தைப் பாதுகாப்பதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங் களுக்காக ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்.**

(இதனகத்துப்பின்னர் “சமவாயம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) நாடுகளுக்கிடையேயான ஒழுங்கமைக்கப் பட்ட குற்றச்செயல்களுக்கெதிரான ஐக்கிய நாடுகள் சமவாய மொன்று 2000 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆந் தேதியன்று ஐக்கிய நாடுகள் சபையின் பொது அவையினால் நியூயோர்க்கில் ஏற்றுக் கொள்ளப்பட்டதாதலாலும்: முன்னுரை

2006 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந்தேதியன்று இலங்கையானது சொல்லப்பட்ட சமவாயத்தை பின்னுறுதிப் படுத்தியுள்ளதாதலாலும்:

பாரதூரமான குற்றச்செயல்களைத் தடுப்பதற்காகவும், புலனாய்வு செய்வதற்காகவும், அவற்றுக்கெதிராகக் குற்ற வழக்குகளைத் தொடுப்பதற்காகவும் மற்றும் அவற்றுக்குத் தண்டனையளிப்பதற்காகவும் சட்டக் கட்டுக்கோப்பை அதன்மூலம் பலப்படுத்துவதனை அவசியமாக்கியும், பொதுமக்கள் காப்பு, தேசியப் பந்தோபஸ்து, பொருளாதாரம் மற்றும் சட்டவாட்சி என்பவற்றுக்குப் பாரதூரமான அச்சுறுத்தலொன்றை ஏற்படுத்தியும், பாரதூரமான குற்றச்செயல்களானவை, அவற்றின் அளவு, நவீன முறை மற்றும் பாதகமான தாக்கத்தில் அதிகரித்துவந்துள்ளனவாதலாலும் :

மேற்கூறப்பட்ட சமவாயத்தின்கீழ் இலங்கையின் கடப் பாடுகளுக்குப் பயன்கொடுப்பதற்கும் இலங்கையில்

PL15938- 470 (2026/09)

பாரதூரமான குற்றச்செயல்களைத் தடுப்பதற்கானதும் மற்றும் முறியடிப்பதற்கானதுமான சட்டக் கட்டுக்கோப்பைப் பலப்படுத்துவதற்கும் சட்டவாக்க ஏற்பாடுகளைச் செய்வது இலங்கை அரசாங்கத்துக்கு அவசியமாக வந்துள்ளதாதலாலும்:

ஆகவே இப்பொழுது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2026 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களைத் தடுத்தல் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

சட்டத்தின் குறிக்கோள்கள்

**2.** சட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியற் குழுக்களினதும் அத்தகைய ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியற் குழுக்களில் சம்பந்தப்பட்டுள்ள ஆட்களினதும் செயற்பாடுகளைத் தடுத்தலும், ஒடுக்குதலும், சீர்குலைத்தலும்;

(ஆ) பாரதூரமான குற்றச்செயலின் புலனாய்வையும் குற்றவழக்குகளையும் வசதிப்படுத்துதல்;

(இ) இக்குறிக்கோள்கள் எய்துவதற்கெனத் தேசிய மற்றும் சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்துதலும் வசதிப்படுத்துதலும்; அத்துடன்

(ஈ) அத்தகைய ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியற் குழுக்களினால் விளைவிக்கப்பட்ட அல்லது விளைவிக்கும் சாத்தியங்கொண்ட தீங்கிலிருந்து பொதுமக்களைப் பாதுகாத்தல்.

இச்சட்டத்தின் ஏற்புடைமை

**3.** இச்சட்டத்தின் ஏற்பாடுகள், (இச்சட்டத்தில் “பாரதூரமான குற்றச்செயல்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) இச்சட்டத்தில் அல்லது இதற்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தவறுகளை அல்லது நான்காண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்டவொரு காலத்துக்கு இருவகையிலொருவகையான அதிகபட்ச மறியற்றண்டனைக் காலத்தினால் தண்டிக்கப்படற்பாலதான

ஏதேனும் தவறை, அத்தகைய பாரதூரமான குற்றச்செயல் பின்வருவோராகவுள்ள, ஒழுங்கமைக்கப்பட்ட குற்ற வியற் குழுவொன்றின் உறுப்பினரொருவரினால் புரியப் படுமிடத்து, தடுப்பதற்கு, புலனாய்வு செய்வதற்கு அவற்றிக்கெதிராகக் குற்றவழக்குத்தொடுப்பதற்கு மற்றும் தண்டனையளிப்பதற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்:-

(அ) இலங்கையினுள் அல்லது அதற்கு வெளியே யுள்ளவரான எவரேனும் இலங்கைப் பிரசை; அல்லது

(ஆ) (i) இலங்கையில் முழுமையாக அல்லது பகுதியளவிலுள்ளவரான;

(ii) இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளில் அல்லது அவற்றின் மீதுள்ளவரான;

(iii) இலங்கையின் வான் வெளியிலுள்ளவரான;

(iv) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட அல்லது இலங்கையிலுள்ள எவரேனும் ஆளினால் வாடகைக்கமர்த்தப்பட்ட ஒரு வானூர்தியிலுள்ளவரான அல்லது கலத்திலுள்ளவரான அல்லது அது தொடர்பிலுள்ளவரான;

(v) இலங்கைக் குடியரசின் ஆள்புலத்தின் ஆள்புல நீர்ப்பரப்புகளும் வான் வெளியு முட்பட, இலங்கைக் குடியரசின் ஆள்புலத்தினுள்ளான ஒரு கலத்தின் அல்லது ஒரு வானூர்தியின் மீதுள்ளவரான அல்லது அது தொடர்பிலுள்ளவரான;

(vi) இலங்கையின் ஓர் இராஜதந்திர அல்லது காவற்றூதக அலுவலக வளவுகளினுள் அல்லது இலங்கையின் இராஜதந்திர அல்லது காவற்றூதலுவலகத்தின்

அலுவலக வளவுகளினுள் முழுமையாக அல்லது பகுதியளவில் அல்லது அத்தகைய வளவுகள் தொடர்பில், அல்லது அத்தகைய இராஜதந்திர அல்லது காவற்றூதகத் தலைவரின் வதிவிடத்தில் அல்லது எவரேனும் இராஜதந்திர அல்லது காவற்றூது அலுவலரின் அல்லது அத்தகைய தூதகத்தின் வேறெவரேனும் ஊழியரின் வதிவிடத்தில் உள்ளவரான; அல்லது

(vii) இலங்கை அரசாங்கத்தினது ஒரு நியதிச் சட்டச் சபையினதாக இலங்கைக்கு வெளியே அமைந்துள்ள அலுவலக வளவுகளினுள் முழுமையாக அல்லது பகுதியளவில், அல்லது அத்தகைய வளவுகள் தொடர்பில், அல்லது அத்தகைய நியதிச்சட்டச் சபையின் ஊழியரொருவரினது வதிவிடத்தினுள் உள்ளவரான,

எவரேனுமாள்.

பாகம் I

**தவறுகளும் தண்டங்களும்**

ஒழுங்கமைக்கப் பட்ட குற்றவியற் குழுவொன்றின் உறுப்பின ரொருவராக விருத்தல்

**4.** (1) ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியற் குழுவொன்றின் உறுப்பினரொருவராக உள்ளவரும் அல்லது செயலாற்றுபவரும் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஒரு நிதிசார் அல்லது வேறு பொருள்வகையான நன்மையைப் பெற்றுக்கொள்வதற்கெனப் பாரதூரமான ஒரு குற்றச்செயலைப் புரிவதற்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வேறு ஆட்களுடன் உடன்படுபவருமான எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஐந்தாண்டுகளுக்குக் குறையாததும் இருபதாண்டுகளை விஞ்சாததுமானவொரு காலத்துக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கும் ஒரு

மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) எவரேனுமாள் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஒழுங் கமைக்கப்பட்ட குற்றவியற் குழுவொன்றின் உறுப்பின ரொருவராக உள்ளாரா அல்லது செயலாற்றுகின்றாரா என்பதைத் தீர்மானிப்பதில், நீதிமன்றமொன்று கவனத்துட் கொள்ளக்கூடிய கருமங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கு கின்றன, ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படுவனவல்ல:-

(அ) ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியற் குழுவின் அறியப்பட்ட உறுப்பினர்களுடன் நேரடியான அல்லது மெய்நிகர் சந்திப்புகளில் சம்மந்தப் பட்டிருத்தல்;

(ஆ) ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியற் குழுவின் அறியப்பட்ட உறுப்பினர்களினால் (ஏலவேயுள்ள அல்லது முன்னைய உறுப்பினர்களாயினுஞ்சரி) அவ்வாள் உறுப்பினரொருவராக அடையாளங் காணப்படுகின்றாரா வென்பது;

(இ) ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியற் குழுவின் அறியப்பட்ட உறுப்பினர்களினால் பயன்படுத்தப் பட்ட ஆடைப்பாங்கை, கைச்சைகளை, மொழியை அல்லது பச்சைகுத்துதல்களை அவ்வாள் பின்பற்றுகின்றாராவென்பது;

(ஈ) ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியற் குழுவின் அறியப்பட்ட உறுப்பினர்களுடன் அவ்வாள் பழகுகின்றாராவென்பது;

(உ) ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியற் குழுவின் உறுப்பினரொருவராகவிருப்பதற்கு வேறெவ ரேனுமாளை அவ்வாள் ஆட்சேர்த்துள்ளாரா அல்லது ஆட்சேர்ப்பிப்பதற்கு எத்தனித்துள்ளாரா வென்பது;

(ஊ) ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியற் குழுவினால் பயன்படுத்தப்படுவதாக அறியப்பட்ட வளவுகளுக்கு அல்லது சந்திப்பிடங்களுக்கு அவ்வாள் வழக்கமாக வருகைதருகின்றாரா

மற்றும் அவ்வளவுகள் அல்லது சந்திப்பிடங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியற் குழுவுக்குச் சொந்தமானவை அல்லது அதனால் இருப்பாட்சிகொள்ளப்பட்டவை என அவ்வாள் அறிந்துள்ளாரா அல்லது நம்புவதற்கு அவருக்கு நியாயமான ஏதுக்கள் உள்ளனவாவென்பது;

(எ) ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியற் குழுவின் வழக்கமான குற்றவியற் செயற்பாட்டுக்கு ஒத்ததாகவுள்ள ஏதேனும் பாரதூரமான குற்றச் செயலுக்காக ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியற் குழுவின் அறியப்பட்ட உறுப்பினர்களுடன் ஒன்றுகூடியிருக்கையில் அவ்வாள் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளில் கைதுசெய்யப் பட்டுள்ளாராவென்பது;

(ஏ) அவ்வாள் ஏதேனும் சான்றின்மூலம் ஒழுங் கமைக்கப்பட்ட குற்றவியற் குழுவின் உறுப்பினரொருவராக அடையாளங் காணப் படுகின்றாராவென்பது;

(ஐ) அவ்வாள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியற் குழுவிடமிருந்து ஏதேனும் நிதிசார் அல்லது வேறுபொருள்வகையான நன்மையைப் பெற்றுள்ளாரா அல்லது பெறுகின்றாராவென்பது;

(ஒ) அவ்வாள், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியற் குழுவின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர்களுடன் சேர்ந்து முன்னையவொரு சந்தர்ப்பத்தில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பாரதூரமான குற்றச்செயல்களைப் புரிந்துள்ளாராவென்பது;

(ஓ) ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியற் குழுவின் உறுப்பினரொருவராகவிருப்பதற்கு அவ்வாள் கையொப்பமிட்டுள்ளாராவென்பது; அல்லது

(ஔ) ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியற் குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக அவ்வாள் ஏதேனும் அங்குரார்ப்பண விழாவுக்கு, அறிவுபுகட்டல் அல்லது தொழிற்பாட்டு அமர்வுக்கு உட் பட்டுள்ளாரா அல்லது ஒழுங்கமைக்கப்பட்ட

குற்றவியற் குழுவின் ஏதேனும் ஒழுக்காற்று நடைமுறைக்கு அமைந்துள்ளாராவென்பது.

பாரதூரமான குற்றச்செய லொன்றைப் புரிய எத்தனித்தல், அதற்கு உடந்தை யளித்தல் அல்லது சதிசெய்தல்

**5.** (1) பாரதூரமானவொரு குற்றச்செயலைப் புரிவதற்கு எத்தனிக்கின்ற, உடந்தையளிக்கின்ற, சதிசெய்கின்ற, ஒழுங்கமைக்கின்ற, வசதிப்படுத்துகின்ற, ஆலோசனையளிக்கின்ற, செய்யப்பெறுகின்ற, பணிக்கின்ற, உதவுகின்ற, ஏவிவிடுகின்ற, ஊக்குவிக்கின்ற, தூண்டுகின்ற, கட்டளையிடுகின்ற, அல்லது மதியுரையளிக்கின்ற அல்லது ஆயத்தஞ்செய்கின்ற அல்லது ஒரு பாரதூரமான குற்றச்செயலைப் புரிவதற்கு ஆயத்தநிலையான ஏதேனும் செயலை எவரேனுமாள் செய்தால் மற்றும் அத்தகைய எத்தனம், உடந்தை, சதி, ஒழுங்கமைத்தல், வசதிப்படுத்தல், ஆலோசனையளித்தல், செய்யப்பெறுதல், பணித்தல், உதவுதல், ஏவிவிடுதல், ஊக்குவித்தல், தூண்டுதல், கட்டளையிடுதல் அல்லது மதியுரையளித்தல் அல்லது ஆயத்தத்தின் விளைவாகப் பாரதூரமான குற்றச்செயலொன்று புரியப்பட்டால், அத்தகைய ஆள், 6 ஆம் பிரிவில் அத் தவறுக்காக விதிக்கப்பட்ட அதே தண்டத்துக்கு ஆளாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அத்தகைய எத்தனம், உடந்தை சதி, ஒழுங்கமைத்தல், வசதிப்படுத்தல், ஆலோசனையளித்தல், பெற்றுக்கொடுத்தல், பணித்தல், அதற்கு உதவுதல், ஏவிவிடுதல், ஊக்குவித்தல், தூண்டுதல், கட்டளையிடுதல் அல்லது மதியுரையளித்தல் அல்லது ஆயத்தின் விளைவாக 6 ஆம் பிரிவின்கீழான தவறு புரியப்படாவிடின், அத்தகைய ஆள், மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மீது, இரண்டாண்டுகளுக்குக் குறையாததும் பதினைந்தாண்டுகளை விஞ்சாததுமான காலமொன்றுக்கு இருவகையிலொருவகையான மறியற் றண்டனைக்கும் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கும் ஆளாதல் வேண்டும்.

பொதுவான குற்றவியற் குறிக்கோ ளொன்றினை முன்னெடுப்பதில் செயலாற்றுதல்

**6.** (1) ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியற் குழுவொன்றின் உறுப்பினர்களால் கொள்ளப்படும் பொதுவான குற்றவியற் குறிக்கோளொன்றினை முன்னெடுத்துச் செய்வதில் –

(அ) ஒரு பாரதூரமான குற்றச்செயலைப் புரிகின்ற; அல்லது

(ஆ) வேறேதேனும் செயலை அறிந்துகொண்டு செய்கின்ற,

எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றார்.

(2) ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியற் குழுவொன்றின் உறுப்பினரொருவராகவுள்ளவரும் –

(அ) (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழான பாரதூரமான குற்றச்செயலொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுகின்ற வருமான ஆளொருவர் அதிகபட்ச மறியற்றண்டனைக் காலத்தின் இரண்டு மடங்குகளுக்குக் குறையாத மறியற்றண்டனைக்கும் வேறேதேனும் சட்டத்தின் கீழ் அத்தகைய தவறுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட குற்றப்பணத்துக்கும் ஆனால் பதினைந்தாண்டுகளைவிஞ்சாத இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கும் ஆளாதல் வேண்டுமென்பதுடன் விதித்துரைக்கப் பட்ட தண்டனைத்தீர்ப்பு ஆயுட்கால மறியற்றண்டனையாக அல்லது மரண தண்டனையாக இருக்குமிடத்து, அத்தகைய வேறு சட்டத் தினால் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக தண்டிக்கப் படுதலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழான தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப் படுகின்றவருமான ஆளொருவர் இரண்டாண்டுகளுக்குக் குறையாததும் பதினைந்தாண்டுகளை விஞ்சாததுமான காலத்துக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கும் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதல் வேண்டும்.

(3) ஒழுங்கமைக்கப்பட்டவொரு குற்றவியற் குழுவின் உறுப்பினரொருவராக இராதவரும் –

(அ) (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழான பாரதூரமான குற்றச்செயலொன்றுக்குக்

குற்றத்தீர்ப்பளிக்கப்படுகின்றவருமான ஆளொருவர் வேறேதேனும் சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்ட காலத்தின் ஓரரைவாசியினால் அதிகரிக்கப்பட்ட அத்தகை வேறு சட்டத்தின்கீழ் அத்தகைய தவறுக்காக ஏற்பாடுசெய்யப்பட்ட மறியற்றண்டனைக் காலத்துக்கும் குற்றப் பணத்துக்கும் ஆளாதல் வேண்டும்; ஆனால் இது மூன்றாண்டுகளுக்குக் குறையாததாகவும் பதினைந்தாண்டுகளை விஞ்சாமலும் இருத்தல் வேண்டும்; அத்துடன் விதித்துரைக்கப்பட்ட தண்டனைத்தீர்ப்பு ஆயுட்கால மறியற்றண்டனையாக அல்லது மரணதண்டனையாக இருக்குமிடத்து, அத்தகைய வேறுசட்டத்தினால்ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக தண்டிக்கப்படுதலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழான தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுகின்றவருமான ஆளொருவர் இரண்டாண்டுகளுக்குக் குறையாததும் பத்தாண்டுகளை விஞ்சாததுமானவொரு காலத்துக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கும் மூன்று இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கும் ஆளாதல் வேண்டும்.

புகலளித்தல் முதலியன

**7.** வேறோராள் சட்டப்படியாகத் தண்டிக்கப்படுவதனைத் தடுக்கும் உட்கருத்துடன் இச்சட்டத்தின்கீழ் ஒரு பாரதூரமான குற்றச்செயலைப்புரிந்துள்ளார் அல்லது புரிகின்றார் என அவர் அறிந்துள்ள அல்லது நம்புவதற்குக் காரணங்கொண்டுள்ள அந்தவேறு ஆளுக்குப் புகலளிக்கின்ற, அவரை மறைத்துவைக்கின்ற, அவருக்கு உதவிபுரிகின்ற அல்லது அவரைப் பாரமரிக்கின்ற ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பின்வருவனவற்றிற்கு ஆளாதலும் வேண்டும்:-

(அ) அவர் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியற் குழுவொன்றின்உறுப்பினரொருவராகவிருப்பின், ஐந்தாண்டுகளுக்கு குறையாததும் பத்தாண்டுகளை விஞ்சாததுமானவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கும் மூன்று இலட்சம்

ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும்; அல்லது

(ஆ) அவர் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியற்குழுவொன்றின் உறுப்பினரொருவராக இராதிருப்பின், இரண்டாண்டுகளுக்குக்குறையாததும்ஐந்தாண்டுகளை விஞ்சாதது மானவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கும் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கும்.

புலனாய்வு செய்கின்ற அல்லது உதவி புரிகின்ற ஆட்களுக்கு பயமுறுத்தலை அல்லது தீங்கை விளைவித்தல் முதலியன

**8.** (1) இச்சட்டத்தின்கீழான பாரதூரமான குற்றச் செயலொன்றைப் புரிதல் தொடர்பாக –

(அ) பொய்யான சாட்சியத்தைத் தூண்டிவிடுவதற்கென ; அல்லது

(ஆ) சாட்சியமளிப்பதில் அல்லது சான்றை முன்னிலைக்குக் கொணருவதில் தலையிடுவதற்கென,

வலோத்காரத்தை, பயமுறுத்தலை அல்லது அச்சுறுத்தல்களை அல்லது வாக்குறுதிகளைப் பயன்படுத்துகின்ற அல்லது ஏதேனும் தகாத அனுகூலத்தை முனைகின்ற அல்லது அளிக்கின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மீது ஐந்தாண்டுகளுக்குக் குறையாததும் பதினைந்தாண்டுகளை விஞ்சாததுமானவொரு காலத்துக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கும் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழான பாரதூரமானவொரு குற்றச் செயலைக் புரிதல் தொடர்பாகச் சட்ட வலுவுறுத்துகையின், குற்றவழக்குத்தொடுத்தலின் அல்லது நீதிமுறை உத்தியோகத்தர்களின் கடமைகளுடன் தலையிடுவதற்கென வலோத்காரத்தை, பயமுறுத்தலை அல்லது அச்சுறுத்தல்களைப் பயன்படுத்துகின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப்

புரிகின்றாரென்பதுடன் மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப் பளிக்கப்படுவதன்மீது ஐந்தாண்டுகளுக்குக்கு குறையாததும் பதினைந்தாண்டுகளை விஞ்சாததுமான காலமொன்றுக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கும் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியற் குழு வொன்றுக்கான உறுப்பினர்களை ஆட்சேர்த்தல்

**9.** குழுவொன்று ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியற் குழுவொன்றென அறிந்துகொண்டு அல்லது நம்புவதற்கு நியாயமான ஏதுக்களைக் கொண்டிருந்து அக்குழுவின் உறுப்பினரொருவராக வருவதற்கு அல்லது அதன் முகாமைத்துவத்தில் உதவிபுரிவதற்கு –

(அ) வேறோரரளை ஏவிவிடுகின்ற, தூண்டிவிடுகின்ற அல்லது வரவழைக்கின்ற; அல்லது

(ஆ) வேறெவரேனுமாளை ஏவிவிடுவதற்கு, தூண்டிவிடுவதற்கு அல்லது வரவழைப்பதற்கு அந்த வேறு ஆள்மீது ஏதேனும் வன்முறையை, பயமுறுத்தலை அல்லது அச்சுறுத்தலைப் பயன்படுத்துகின்ற,

ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது பதினைந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கும் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

ஒழுங்கமைக் கப்பட்ட குற்றவியற் குழுவொன்றில் பங்குபற்றுதல்

**10.** (அ) ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியற் குழுவொன்று ஒன்றில் இலட்சியத்தையும் பொதுச் செயற்பாட்டையும் அல்லது இச்சட்டத்தின்கீழான பாரதூரமான குற்றச்செயலொன்றைப் புரிவதற்கான அதன் உட்கருத்தையும் அறிந்து கொண்டு; அல்லது

(ஆ) எவரேனும் ஆளின் நடத்தை ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியற் குழுவின் இலட்சியத்தை அல்லது இச்சட்டத்தின்கீழான பாரதூரமான குற்றச்

செயலொன்றைப் புரிவதற்கான அதன் உட் கருத்தை எய்துவதற்குப் பங்களிக்குமென அறிந்து கொண்டு,

அந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியற் குழுவின் வேறேதேனும் செயற்பாட்டில் முனைப்பான பங்கொன்றை வேண்டுமென்றும் அல்லது அறிந்துகொண்டும் வகிக்கின்ற அத்தகைய ஆள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது பதினைந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கும் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதலும்வேண்டும்.

வளவுகளைப் பயன்படுத்துவதற்கு ஒழுங்கமைக் கப்பட்ட குற்றவியற் குழு வொன்றுக்கு அனுமதி யளித்தல்

**11.** ஆளொருவர் –

(அ) இச்சட்டத்தின்கீழான பாரதூரமான குற்றச் செயலொன்றை; அல்லது

(ஆ) ஒரு நிதிசார் அல்லது வேறு பொருள்வகையான நன்மையை ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியற் குழுவுக்கு அளிக்கும் நோக்கத்துக்காகவுள்ளதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழானதுமான தவறொன்றை,

புரிவதற்கு ஆதரவளிப்பதற்கென, உதவுவதற்கென அல்லது அதனை மேம்படுத்துவதற்கென, அவ்வாளினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அல்லது இருப்பாட்சிகொள்ளப்பட்ட அல்லது அவ்வாள் அதன்மீதான கட்டுப்பாட்டைக்கொண்ட எவையேனும் வளவுகளைப் பயன்படுத்துவதற்கு, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியற் குழுவொன்றாகவுள்ளதென அவ்வாள் அறிந்துள்ள அல்லது நம்புவதற்கு நியாயமான ஏதுக்களைக் கொண்டுள்ள ஏதேனும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியற் குழுவை அல்லது ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியற் குழுவின் எவரேனும் உறுப்பினரை அனுமதிக்கின்ற அவ்வாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் மேல் நீதிமன்றத்தினால் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மீது பத்தாண்டுகளை விஞ்சாத காலமொன்றுக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கும் மூன்று இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் அல்லது அத்தகைய மறியற்றண்டனை மற்றும் குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

**12.** (1) (அ) (i) சூழ்ச்சிசெய்கின்ற செயற்பாட்டு வடிவமொன்றிலிருந்து நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் பெறப்பட்ட ஏதேனும் ஆதனத்தைப் பெறுகின்ற அல்லது தக்கவைத்திருக்கின்ற;

சூழ்ச்சி செய்கின்ற செயற்பாடுகள் தொடர்பான தவறுகள்

(ii) அத்தகைய ஆதனம் அவ்வாறு பெறப்பட்டதென அறிந்திருக்கின்ற அல்லது நியாயமானமுறையில் அறிந்திருக்கவேண்டிய; அத்துடன்

(iii) ஏதேனும் தொழில் முயற்சியிலான ஏதேனும் அக்கறையைக் கொள்வதில் அல்லது அதன் தாபிப்பில், தொழிற்பாட்டில் அல்லது செயற்பாடுகளில் அத்தகைய ஆதனத்தின் ஏதேனும் பாகத்தை நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் பயன்படுத்துகின்ற அல்லது முதலீடு செய்கின்ற;

(ஆ) (i) ஏதேனும் தொழில் முயற்சியின் சார்பில் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் ஆதனத்தைப் பெறுகின்ற அல்லது தக்கவைத்திருக்கின்ற; அத்துடன்

(ii) அத்தகைய ஆதனம் சூழ்ச்சி செய்கின்ற செயற்பாட்டு வடிவமொன்றிலிருந்து அல்லது அதனூடாகப் பெறப்பட்டது அல்லது பெறப்படுகின்றது என அறிந்திருக்கின்ற அல்லது நியாயமானமுறையில் அறிந்திருக்கவேண்டிய;

(இ) (i) ஏதேனும் தொழில் முயற்சியின் சார்பில் அல்லது ஏதேனும் தொழில் முயற்சியிலான அக்கறையைக் கொள்வதில் அல்லது அதன் தாபிப்பில், தொழிற்பாட்டில் அல்லது செயற்பாடுகளில் ஏதேனும் ஆதனத்தை நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் பயன்படுத்துகின்ற அல்லது முதலீடுசெய்கின்ற; அத்துடன்

(ii) அத்தகைய ஆதனம் சூழ்ச்சிசெய்கின்ற செயற்பாட்டு வடிவமொன்றிலிருந்து அல்லது அதனூடாகப் பெறப்பட்டது அல்லது பெறப்படுகின்றது என அறிந்திருக்கின்ற அல்லது நியாய மானமுறையில் அறிந்திருக்கவேண்டிய;

(ஈ) ஒரு சூழ்ச்சிசெய்கின்ற செயற்பாட்டு வடிவத்தினூடாக ஏதேனும் தொழில் முயற்சியிலான ஏதேனும் அக்கறையை அல்லது அதன் கட்டுப்பாட்டை நேரடியாக அல்லது நேரடியாக வல்லாமல் கொள்கின்ற அல்லது பேணுகின்ற;

(உ) ஏதேனும் தொழில்முயற்சியை முகாமை செய்கையில் அல்லது அதனால் தொழிலுக் கமர்த்தப்பட்டிருக்கையில் அல்லது அதனோடு இணைந்திருக்கையில் சூழ்ச்சி செய்கின்ற செயற்பாட்டு வடிவமொன்றி னூடாக அத்தகைய தொழில் முயற்சியின் அலுவல்களை நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் நடாத்துகின்ற அல்லது அதன் நடாத்துகையில் பங்குபற்று கின்ற; அல்லது

(ஊ) தொழில்முயற்சியொன்றின் தொழிற் பாட்டை அல்லது செயற்பாடுகளை முகாமைசெய்கின்ற மற்றும் எவரேனு மாள் அத்தொழில் முயற்சி யினால் தொழிலுக்கமர்த்தப்பட்டிருக் கையில் அல்லது அதனோடு இணைந் திருக்கையில் சூழ்ச்சிசெய்கின்ற செயற்பாட்டு வடிவ மொன்றினூடாக அத்தொழில் முயற்சியின் அத்தகைய அலுவல்களை நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் நடாத்துகின்ற அல்லது அதன் நடாத் துகையில் பங்கு பற்றுகின்ற,

எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றரென்பதுடன் மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது பதினைந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு

அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "சூழ்ச்சி செய்கின்ற செயற்பாட்டு வடிவம்" என்பது, இச்சட்டத்தின்கீழான ஏதேனும் பாரதூரமான குற்றச்செயலில் திட்டமிடப்பட்ட, நடைபெற்றுக்கொண்டிருக்கும், தொடர்ச்சியான அல்லது மீண்டும் மீண்டுமான பங்குபற்றுகை அல்லது சம்மந்தப்படுகை என்று பொருளாகுமென்பதுடன் அத்தகைய பாரதூரமான குற்றச்செயல்களுள் ஆகக்குறைந்தது இரண்டையேனும் உள்ளடக்குகின்றது; அத்தவறுகளுள் ஒன்று இச்சட்டம் தொடங்கியபின்னர் இடம்பெற்றிருத்தலும் கடைசியான பாரதூரமான குற்றச்செயல் அத்தகைய முன்னைய குற்றச்செயல் புரியப்பட்டபின்னர் பத்தாண்டுகளினுள் (ஏதேனும் மறியற்றண்டனைக் காலப்பகுதி நீங்கலாக) இடம் பெற்றிருத்தலும் வேண்டும்.

ஆளொருவர் நிகழ்வொன்று பற்றி அறிந்துள் ளாரென எப்போது சொல்லப் படுகின்றது

**13.** (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, ஆளொருவர் பின்வரும் சந்தர்ப்பங்களில் ஒரு நிகழ்வுபற்றி அறிந்துள்ளா ரெனக் கூறப்படுகின்றது:-

(அ) அந்நிகழ்வுபற்றி அத்தகைய ஆள் உண்மையாக அறிந்திருந்தால்; அல்லது

(ஆ) நீதிமன்றம் பின்வருமாறு திருப்திப்படின்:-

(i) அந்நிகழ்வு உள்ளதற்கான நியாய மானவோர் இயலுமாந்தன்மை உள்ள தென அத்தகைய ஆள் நம்பினால்; அத்துடன்

(ii) அந்நிகழ்வு உள்ளதனை உறுதிப்படுத்து வதற்கான தகவல்களை அத்தகைய ஆள் பெற்றுக்கொள்வதற்குத் தவறினால்.

(2) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, ஆளொருவர் செய் திருக்கவேண்டிய முடிபுகள் –

(அ) அத்தகைய ஆள் வகிக்கும் பதவியில் அவரிடமிருந்து நியாயமானமுறையில் எதிர் பார்க்கப்பட்டிருக்கக்கூடிய அறிவையும், திறமை யையும், பயிற்சியையும், அனுபவத்தையும், அத்துடன்

(ஆ) அத்தகைய ஆள் உண்மையில் கொண்டிருக்கும் அறிவையும், திறமை யையும், பயிற்சியையும், அனுபவத்தையும்.

கொண்டுள்ளவரும் நியாயமான முறையில் விழிப்புக்கவனமும் காவற்காப்பும் உடைய வருமானவோர் ஆளினால் செய்யப்பட்டிருக்கக் கூடியவையாகவிருப்பின், அத்தகைய ஆள் நிகழ்வொன்றுள்ளதென நம்புவதற்கான காரணத்தைக் கொண்டுள்ளாரெனச் சொல்லப் படுகின்றது.

இச்சட்டத்தின் கீழான பாரதூரமான குற்றச் செயலொன்று தொடர்பான விடயத்தை வெளியிடுதல்

**14.** (1) (இப்பிரிவில் "பலியாக்கப்பட்டவர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இச்சட்டத்தின்கீழான பாரதூரமான குற்றச்செயலொன்று எவ்வாளுக்கதிராகப் புரியப்பட்டதாகச் சார்த்தப்படுகின்றதோ அல்லது கண்டுபிடிக்கப்படுகின்றதோ அவ்வாளின் பெயரை அல்லது அடையாளத்தை அறியத் தரக்கூடிய ஏதேனும் விடயத்தை அச்சிடுகின்ற அல்லது வெளியிடுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் நீதிவானொருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது இரண்டாண்டுகளை விஞ்சாத காலத்துக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது ஒரு குற்றப்பணத்துக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிலுள்ளதெதுவும், பலியாக்கப் பட்டவரின் பெயரை, அல்லது அவரின் அடையாளத்தை அறியத்தரக்கூடிய ஏதேனும் விடயத்தை அச்சிடுவதற்கு அல்லது வெளியிடுவதற்கு, அத்தகைய அச்சிடுதல் அல்லது வெளியிடுதல் பின்வருமாறிருப்பின், ஏற்புடையதாதலாகாது:-

(அ) அத்தகைய புலனாய்வின் நோக்கங்களுக்காக நல்லெண்ணத்துடன் செயலாற்றுகின்ற பொலிசு நிலையத்திற்குப்பொறுப்பாகவுள்ள அலுவலரின் அல்லது அத்தகைய பாரதூரமான குற்றச்செயல் பற்றிப் புலனாய்வொன்றைச் செய்கின்ற பொலிசு அலுவலரின் கட்டளையினால் அல்லது அதன்கீழ்;

(ஆ) பலியாக்கப்பட்டவரின் எழுத்திலான அதிகார வளிப்பினால் அல்லது அதனோடு; அல்லது

(இ) பலியாக்கப்பட்டவர் இறந்திருக்குமிடத்து, பலி யாக்கப்பட்டவரின் கிட்டிய உறவினரின், அல்லது பலியாக்கப்பட்டவர் பராயமடையாத ஒருவராக

அல்லது சித்த சுவாதீனமற்றவராகவிருக்குமிடத்து, பலியாக்கப் பட்டவரின் பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் எழுத்திலான அதிகாரவளிப்பினால் அல்லது அதனோடு:

ஆயின், அத்தகைய அதிகாரவளிப்பு, ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் சேமநல நிறுவனத்தின் அல்லது ஒழுங்கமைப்பின் எவ்வாறாயினும் விவரிக்கப்பட்ட தவிசாளர், செயலாளர் அல்லது முகாமையாளர் தவிர்ந்த எவரேனுமாளுக்கு அத்தகைய கிட்டிய உறவினரினால் வழங்கப்படுதலாகாது.

(3) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னனுமதியின்றி, இச்சட்டத்தின்கீழானவொரு பாரதூரமான குற்றச்செயல் தொடர்பில் அத்தகைய நீதிமன்றத்திலான ஏதேனும் வழக்குநடவடிக்கை தொடர்பான ஏதேனும் விடயத்தை அச்சிடுகின்ற அல்லது வெளியிடுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் நீதிவானொருவர் முன்னரான சுருக்க விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக் கப்படுவதன்மீது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்காக இருவகையிலொருவகையான மறியற் றண்டனைக் காலத்துக்கு அல்லது ஒரு குற்றப்பணத்துக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும்வேண்டும்.

**15.** (1) பாரதூரமான குற்றச்செயலொன்று ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் புரியப்படுமிடத்து, அத்தகைய பாரதூரமான குற்றச்செயல் புரியப்பட்ட நேரத்தில் அத்தகைய குழுவின் எல்லாப் பணிப்பாளர்களும், கூட்டிணைக்கப்பட்ட ஆட்கள் குழுவுடன்சேர்த்து மேலதிகமாக, இயைபான தவறாகவமைகின்ற செயலைப் புரிவதற்காக அத்தகைய பணிப்பாளர் ஒவ்வொருவரும் பொறுப்பாகவிராதிருக்கின்றமை எவ்வாறிருப்பினும், அத்தகைய பாரதூரமான குற்றச்செயலைப் புரிந்தமைக்காகத் தனிப்பட்ட முறையில் ஆளாதல் வேண்டும்:

கூட்டிணைக் கப்பட்ட குழு வொன்றினால் புரியப்பட்ட பாரதூரமான குற்றச் செயலொன்று

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய பணிப்பாளர், பாரதூரமான குற்றச்செயல் தான் அறியாமல் புரியப்பட்டது

அல்லது அப்பாரதூரமான குற்றச்செயல் புரியப்படுவதனைத் தடுப்பதற்கு உரிய எல்லா விழிப்புக்கவனத்தையும் தான் பிரயோகித்தார் என –

(அ) புலனாய்வை நடாத்திய புலனாய்வு அலுவலரை அவர் திருப்திப்படுத்தினால் அவருக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுக்கப்படுதலாகாது; அல்லது

(ஆ) அவர், நிகழ்தகவுச் சமநிலையின் மீது நீதிமன்றத்தின் முன்னர் எண்பித்தால், பாரதூரமான குற்றச்செயலொன்றைப் புரிந்தமைக்காகக் குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.

(2) கூட்டிணைக்கப்பட்ட ஆட்கள் குழுவொன்றின் பணிப்பாளர்களுக்கெதிராகக் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுக்கும் நோக்கத்துக்காக, நேரொத்த கூட்டிணைக்கப்பட்ட ஆட்கள் குழுவுக்கெதிராக முதலில் குற்றவழக்குத்தொடுத்து குற்றத்தீர்ப்பொன்றைப் பெற்றுக்கொள்ளுதல் அவசியமாதலாகாது.

சட்ட ஆளொருவரின் சார்பில் மற்றும் முதலியனவற்றுக்கென செயலாற்றுகின்ற சிரேட்ட அலுவலரொருவருக்காக அச்சட்ட ஆள் பொறுப்பாதல் வேண்டும்

**16.** (1) ஒரு சட்ட ஆளின் சார்பில் அல்லது அச்சட்ட ஆளின் நன்மைக்காகச் செயலாற்றுகின்ற அச்சட்ட ஆளின் சிரேட்ட அலுவலரொருவர் –

(அ) பாரதூரமான குற்றச்செயலைப் புரியுமிடத்து;

(ஆ) பாரதூரமான குற்றச்செயல் புரியப்படுவதனை அறிந்துகொண்டு அதிகாரமளிக்கின்றவிடத்து அல்லது அனுமதிக்கின்றவிடத்து; அல்லது

(இ) சட்ட ஆளின் சார்பில் அல்லது அச்சட்ட ஆளின் நன்மைக்காக பாரதூரமான குற்றச்செயலொன்று புரியப்படவுள்ளதென அறிந்து கொண்டுள்ளவிடத்து அல்லது அந்நிகழ்வு பற்றிவேண்டுமென்று அலட்சியமாக கவனயீனமாகவிருந்துகொண்டு அப்பாரதூரமான குற்றச்செயல் புரியப்படுவதனைத் தடுப்பதற்கு நியாயமான நடபடிகளை எடுக்கவும் தோதான ஒழுங்கமைப்புச்சார் முகாமைத்துவ மாதிரியை ஏற்றுக்கொள்ளவும் பயனுற நடைமுறைப்படுத்தவும் தவறுமிடத்து,

அச்சட்ட ஆள் பாரதூரமான குற்றச்செயலொன்றுக்கு ஆளாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் கீழான பாரதூரமான குற்றச் செயலொன்றுக்குக் குற்றவாளியாகக் காணப்படும் சட்ட ஆளொருவர், பின்வரும் தடைவிதிப்பனவுகளுள் ஒன்றுக்கு அல்லது அதற்கு மேற்பட்டவற்றுக்கு அமைந்தவராதல் வேண்டும்:-

(அ) (i) ஒரு மில்லியன் ரூபாவை; அல்லது

(ii) பாரதூரமான குற்றச்செயலுக்கு நியாய மானமுறையில் ஏற்றிக் கூறப்பட்ட தாகப்பெற்றுக்கொள்ளப்பட்ட நன்மை யினது மொத்தப்பெறுமதியின் அல்லது விளைவிக்கப்பட்ட சேதத்தின் மூன்று மடங்குகளை,

விஞ்சாத குற்றப்பணமொன்று;

(ஆ) தோதானவாறு, பாரதூரமான குற்றச்செயலின் விபரங்களையும் விதிக்கப்பட்ட ஏதேனும் தண்டத்தின் தன்மையும் உட்பட, நீதிமன்றத்தினாலான தீர்ப்பை வெளியிடும்படி சட்ட ஆளுக்கு கட்டளையிடுதல்;

(இ) பொதுமக்கள் நன்மைக்காகக் கூறப்பட்ட கருத் திட்டத்தை நிறைவேற்றும்படி சட்ட ஆளுக்குக் கட்ளையிடுதல்;

(ஈ) ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலப் பகுதிக்காகச் சட்ட ஆள் நீதிமுறை மேற் பார்வையின்கீழ் இடப்படுதல் வேண்டுமெனக் கட்ளையிடுதல்;

(உ) சம்பந்தப்பட்டுள்ள பாரதூரமான குற்றச் செயல்களைப் புரிவதற்குப் பயன்படுத்தப்பட்ட சட்ட ஆளின் தாபனங்கள் தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக மூடிவிடப்படுவதற்கான கட்டளையிடுதல்;

(ஊ) சட்ட ஆள், பகிரங்க விலைகூறலிலிருந்து, பொது நன்மைகளுக்கான அல்லது உதவிக்கான உரித்துடமையிலிருந்து அல்லது பகிரங்கப் பெற்றுக்கொள்ளலில் பங்குபற்றுவதிலிருந்து தற்காலிகமாக அல்லது நிரந்தரமாகத் தகைமையற்றவராதல் வேண்டும் எனக் கட்டளையிடுதல்;

(எ) வேறு வர்த்தகச் செயற்பாடுகளின் தொழில் புரிகையிலிருந்து அல்லது வேறொரு சட்ட ஆளை உருவாக்குவதிலிருந்து சட்ட ஆளைத் தற்காலிகமாக அல்லது நிரந்தரமாகத் தகைமையற்றவராக்குதல்;

(ஏ) சட்ட ஆளின் செயற்பாடுகள், பாரதூரமான குற்றச்செயல்களை நிறைவேற்றுவதனை முழுமையாக அல்லது முக்கியமாக உட்படுத் தியிருப்பின் அல்லது இச்சட்டத்தின்கீழான பாரதூரமான குற்றச்செயலொன்றைப் புரிவதற்குச் சட்ட ஆள் உருவாக்கப்பட்டிருப்பின், அச் சட்ட ஆள் கலைக்கப்படுதல் வேண்டுமெனக் கட்டளையிடுதல்; அத்துடன்

(ஐ) நீதிமன்றம் நீதியானவையெனக் கருதுகின்ற மேலதிகக் கட்டளைகள்.

(3) இப்பிரிவின் நோக்கத்துக்காக “சிரேட்ட அலுவலர்” என்பது, அத்தகைய அலுவலரின் நடத்தை, சட்ட ஆளின் கொள்கையைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக நியாயமாக ஊகிக்கப்படக்கூடியவகையிலான அத்தகைய பொறுப்புடைமை கொண்ட கடமைகளுடனான சட்ட ஆளின் ஊழியர், முகவர் அல்லது அலுவரொருவர் என்று பொருளாகும்.

## பாகம் II

## புலனாய்வுகளும் குற்றவழக்குகளும்

நிறுத்தல் மற்றும் தேடுதல் முதலியன வற்றுக்கான தத்துவம்

**17.** (1) இச்சட்டத்தின்கீழான பாரதூரமான குற்றச் செயலொன்று புரியப்பட்டதென நியாயமான சந்தேகம் உள்ள விடத்து, பொலிசு அலுவலரொருவர், பின்வருவன உட்பட்ட அத்தகைய வழிமுறைகளை எடுக்கலாம்:-

(அ) எவரேனும் சந்தேகநபரை, வாகனத்தை, கலத்தை, புகையிரதத்தை வானூர்தியை அல்லது ஆளில்லா வான்வழி வாகனத்தை நிறுத்தி தேடலாம்:

ஆயின், ஏதேனும் கலன் அல்லது வானூர்தி நிறுத்தப்பட்டு தேடப்படுமிடத்து, 38 ஆம், 39 ஆம் மற்றும் 40 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்;

(ஆ) எவரேனும் சந்தேகநபரை வினவலாம்;

(இ) ஒரு தேடுதலாணையின்றி எவையேனும் வளவுகளினுள் அல்லது காணியினுள் பிரவேசித்து அவற்றைத்தேடலாம்;

(ஈ) எவரேனுமாளைக் கைது செய்யலாம்; அல்லது

(உ) இச்சட்டத்தின்கீழான பாரதூரமான குற்றச் செயலொன்றைப் புரிவதில் பயன்படுத்தப் பட்டதிலிருந்து அதில் பெறப்பட்ட, அதனோடு சம்பந்தப்பட்ட அல்லது அதில் தொடர்புபட்ட அல்லது அதில் பயன்படுத்தப்படுகின்றதாக, அதிலிருந்து பெறப்படுகின்றதாக, அதனோடு சம்பந்தப்படுகின்றதாக அல்லது அதில் தொடர்புபடுகின்றதாக நியாயமான முறையில் சந்தேகிக்கப்பட்ட ஏதேனும் ஆவணத்தை, வஸ்துவை அல்லது பொருளைக் கட்டுக்காப்பினுள் எடுக்கலாம்.

(2) ஒரு வானூர்தி அல்லது ஒரு கலன் தொடர்பில் (1) ஆம் உட்பிரிவின்கீழ் பொலிசு அலுவலர் ஒருவருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களை அவர் பிரயோகிக்குமிடத்து, (351 ஆம் அத்தியாயமான) குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) அவ்வாறு கட்டுக்காப்பினுள் எடுக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் ஆவணம், வஸ்து அல்லது பொருள், செயல்முறைக்குகந்தவரை விரைவாக, இயைபான பொலிசு அலுவலர் எந்தப் பொலிசு நிலையத்தைச் சேர்ந்துள்ளாரோ அந்தப் பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் முன்னிலைக்குக் கொணரப்படுதல் வேண்டும், அல்லது மிகக்கிட்டிய பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் முன்னிலைக்குக் கொணரப்படுதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர், இயைபான ஆவணம், வஸ்து அல்லது பொருள் எந்த நீதிவான் முன்னிலைக்குக் கொணரப்படுகின்றதோ அந்த நீதிவானுக்கு அது தொடர்பான அறிக்கையொன்றை முன்னிலைக்குக் கொணருதல் வேண்டும்; அவர், அவ்வாறு கட்டுக்காப்பினுள் எடுக்கப்பட்ட ஏதேனும் ஆவணத்தின், வஸ்துவின் அல்லது பொருளின் உடைமை அல்லது விடுவிப்பு தொடர்பாகத் தோதானவொரு கட்டளையை ஆக்குதல் வேண்டும்.

கைதொன்று செய்யப்படும் போதான நடவடிக்கை முறை முதலியன

**18.** (1) இச்சட்டத்தின்கீழான கைதொன்றைச் செய்கின்ற பொலிசு அலுவலரொருவர், உடனடியாக, அவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை அத்தகைய பொலிசு அலுவலர் எப்பொலிசு நிலையத்தைச் சேர்ந்துள்ளரோ அப்பொலிசு நிலையத்திற்கு அல்லது மிகக்கிட்டிய பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் முன்னிலைக்குக் கொணருதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் நியதிகளின்படி கைதொன்றைச் செய்வதற்கு ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினரொருவரின் அல்லது கரையோரக் காவல் அலுவலரொருவரின் உதவியைப் பெற்றுக்கொள்வது, அல்லது கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை ஒரு பொலிசு நிலையத்திற்குக் கொண்டுசெல்வதற்கு அத்தகைய உதவியைப் பெற்றுக்கொள்வது பொலிசு அலுவலரொருவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

கைது பற்றிய அறிவிப்பு

**19.** (1) இச்சட்டத்தின்கீழ் எவரேனும் சந்தேகநபர் கைது செய்யப்படுமிடத்து, கைதுசெய்யும் அலுவலர், உடனடியாக அல்லது எவ்விடயத்திலும் கைதுசெய்தலிலிருந்து இருபத்திநான்கு மணித்தியாலங்களுக்குப் பிந்தாமல், அத்தகைய கைதுசெய்தல் பற்றிய நிகழ்வை

ஒப்புக்கொண்டு, பொருளளவில் இரண்டாம் அட்டணையில் தரப்பட்டுள்ளவாறான படிவத்தில், அத்தகைய சந்தேகநபரின் கிட்டிய உறவினருக்கு அறிவித்தலொன்றை வழங்குதல் வேண்டும்:

ஆயின், எவரேனும் சந்தேகநபர் கட்டுக்காப்பினுள் எடுக்கப்பட்டு இவ்வுட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறு அறிவித்தலொன்றை வழங்குவது இயன்றதாகவிராதவிடத்து, அது ஏன் இயன்றதல்லதெனக் காரணங்களைக் கொடுத்து, தகவற் புத்தகத்தில் பதிவீடொன்றைச் செய்வதும், அத்தகைய அறிவித்தலை வழங்குவது ஏன் இயன்றதல்ல என்ற காரணங்களை சந்தேகநபர் எந்தப்பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரின் முன்னிலைக்குக் கொணரப்பட்டாரோ அந்தப் பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு அறிக்கையிடுவதும் கைதுசெய்யும் அலுவலரின் கடமையாதல் வேண்டுமென்பதுடன், பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர், அதற்கான காரணங்களுடன் சேர்த்து அத்தகைய நிகழ்வுபற்றிய பதிவீடொன்றைத் தகவற் புத்தகத்தில் செய்தலும் வேண்டும்.

(2) அத்தகைய சந்தேகநபரின் கிட்டிய உறவினர் சமுக மாகவிராதிருப்பின், கைதுசெய்யும் அலுவலர் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட அறிவிப்பு எவருக்குச் சேர்ப்பிக்கப்படவேண்டியுள்ளதோ அவ்வாளொருவரின் அடையாளத்தையும் அவர் எங்குள்ளார் என்பதையும் சந்தேகநபரிடம் விசாரித்தல் வேண்டுமென்பதுடன், சந்தேகநபர் அத்தகைய தகவல்களை வழங்கினால், அத்தகைய ஆளுக்கு அறிவிப்பைச் சேர்ப்பிப்பதற்கு இயன்ற ஒவ்வொரு நடபடியும் எடுக்கப்படுதலும் வேண்டும். சொல்லப்பட்ட அறிவிப்பின் பிரதியொன்று சந்தேகநபருக்குச் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(3) சந்தேகநபர் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படும் பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர், செயல்முறைக்குகந்தவரை விரைவாக, மற்றும் எப்பட்சத்திலும் சந்தேகநபர் அவர் முன்னிலைக்குக் கொணரப்பட்டதிலிருந்து இருபத்திநான்கு மணித்தியாலங்களுக்குப் பிந்தாமல், பொருளளவில் மூன்றாம் அட்டணையில் தரப்பட்டுள்ள

படிவத்தில் அத்தகைய கைதுசெய்தல் பற்றி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அறிவித்தல் வேண்டுமென்பதுடன் பொருளளவில் நான்காம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்தில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்கு அல்லது அவரது அதிகார மளிக்கப்பட்ட பிரதிநிதிக்கு அறிவித்தலும் வேண்டும்.

(4) இச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்ட சந்தேக நபரொருவர், அத்தகைய சந்தேகநபரை நீதிவான் முன்னிலைக்குக் கொணராமல் விடுவிக்கப்படுதலாகாது என்பதுடன் அத்தகைய விடுவிப்பு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குத் தெரிவிக்கப்படுதலும் வேண்டும்.

நீதிவானொருவர் முன்னிலைக்குக் கொணருதல்

**20.** (1) இச்சட்டத்தின் நியதிகளின்படி பொலிசு அலுவலரொருவரினால் கைதுசெய்யப்பட்டு கட்டுக்காப்பில் வைத்திருக்கப்பட்ட சந்தேகநபரொருவர் உடனடியாக, எப்பட்சத்திலும் அத்தகைய கைதுசெய்தநேரத்திலிருந்து எழுபத்திரெண்டு மணித்தியாலங்களுக்குப் பிந்தாமல் மிகக்கிட்டிய நீதிவான் முன்னிலைக்குக் கொணரப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், கைதானது இலங்கையினுள் செய்யப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய எழுபத்திரெண்டு மணித்தியாலங்களைக் கணக்கிடுவதில், கைதுசெய்யப்பட்ட இடத்திலிருந்து இயைபான நீதிவானிடம் செல்லும் பயணத்துக்கு அவசியமான காலப்பகுதி தவிர்க்கப்படுதல் வேண்டும்:

ஆயின், மேலும், கைதானது இலங்கைக்கு வெளியே அல்லது ஏதேனும் வானூர்தியில் அல்லது கலத்தில் செய்யப்பட்டுள்ளவிடத்து, கைதுசெய்யப்பட்ட இடத்திலிருந்து இயைபான நீதிவானிடம் செல்லும் பயணத்துக்கு அவசியமான காலப்பகுதி, அத்தகைய எழுபத்திரெண்டு மணித்தியாலங்களைக் கணக்கிடுவதில் தவிர்க்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் சந்தேகநபரொருவரை நீதிவானொருவர் முன்னிலைக்குக் கொணருவதன்மேல், மேலதிகப் புலனாய்வை நடாத்தும் நோக்கத்துக்காகச் சந்தேகநபரின் மேலும் நீடிக்கப்பட்ட கட்டுக்காப்பு

அவசியமாகவுள்ளதென நம்புவதற்கான நியாயமான ஏதுக்களைப் புலனாய்வை நடாத்துகின்ற பொலிசு அலுவலர் கொண்டுள்ளவிடத்து, நீதிவான், எழுத்தில் பதியப்படவேண்டிய காரணங்களுக்காக, இருபத்தி நான்கு மணித்தியாலங்களை விஞ்சாத மேலதிகக் காலப்பகுதி யொன்றுக்கு அத்தகைய சந்தேகநபரைப் பொலிசுக் கட்டுக்காப்பில் வைத்திருப்பதற்கு அதிகாரமளிக்கலாம்.

(3) ஓராம் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் சந்தேக நபரொருவர் ஒரு நீதிவான் முன்னிலைக்குக் கொணரப் படுமிடத்து, அத்துடன் –

(அ) தடுத்துவைத்தற் கட்டளையொன்று 21 ஆம் பிரிவின்கீழ் முதன்முதலாக இரண்டுமாத காலப்பகுதியொன்றுக்கு வழங்கப்பட்டிருந்து சோதனைக்காக நீதிவானொருவர் முன்னர் இடப்படுமிடத்து, நீதிவான் அத்தகைய தடுத்துவைத்தற் கட்டளைக்குப் பயன்கொடுக்கின்ற கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டுமென்பதுடன் சந்தேகநபர் தடுத்துவைக்கப்படும் இடத்தின்மீது நியாயா திக்கங் கொண்டுள்ள நீதிவான் நீதிமன்றத்துக்கு அதன் பிரதியொன்றை அனுப்பி வைத்தலும் வேண்டும்; அல்லது

(ஆ) தடுத்துவைத்தற் கட்டளையெதுவும் நீதிவான் முன்னர் இடப்படாதவிடத்து, நீதிவான் சந்தேகநபரை விளக்கமறியலில் இடுதல் வேண்டும்.

(4) சந்தேகநபர் எந்நீதிவான் முன்னிலைக்குக் கொணரப்படுகின்றாரோ அந்நீதிவான் சந்தேகநபரை, அந்தரங்கமாகச் சந்தித்து அவரது நல்வாழ்வுபற்றி ஆராய்ந்து சந்தேகநபர் வழங்கக்கூடிய ஏதேனும் கூற்றைப் பதிதல் வேண்டும்.

தடுத்தவைத்தற் கட்டளைகள்

**21.** (1) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி அல்லது அதற்கெனப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் பதவிவரிசைக்குக்

குறையாத பதவிவரிசையிலுள்ள எவரேனும் அலுவலர், இச்சட்டத்தின்கீழான பாரதூரமான குற்றச்செயலொன்றில் சம்பந்தப்படுகின்ற அல்லது தொடர்புபடுகின்ற சந்தேகநபரொருவரை (4) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக் கப்பட்ட ஏதேனும் நோக்கத்துக்காகப் பொலிசு நிலைய மொன்றில் தடுத்துவைப்பதற்கான தடுத்துவைத்தற் கட்டளையொன்றிக்காகச் செயலாளருக்கு எழுத்திலான விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான விண்ணப்பமொன்றைப் பெற்றதன்மேல், (4) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுள் எவற்றுக்காகவும் சந்தேகநபர் தடுத்துவைக்கப்பட வேண்டுமென நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் உள்ளவெனச் செயலாளர் திருப்திப்படுமிடத்து, அவர், அத்தகைய காரணங்களைப் பதிந்தபின்னர், சந்தேகநபரின் தடுத்துவைத்தலுக்கு அதிகாரமளித்து, பொருளளவில் ஐந்தாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்தில் தடுத்துவைத்தற் கட்டளையொன்றை வழங்கலாம்.

(3) இப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஒவ்வொரு தடுத்து வைத்தற் கட்டளையும் ஒரு தடவையில் இரண்டு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கானதாதல் வேண்டு மென்பதுடன் அத்தகைய தடுத்துவைத்தற் கட்டளைகளின் கீழான தடுத்தவைத்தலின் கூட்டுமொத்தக் காலப்பகுதியானது (1) ஆம் உட்பிரிவின் கீழ் சந்தேகநபரைத் தடுத்துவைக்கும் நோக்கத்துக்காக வழங்கப்பட்ட ஆரம்பத் தடுத்துவைத்தற் கட்டளைத் தேதியிலிருந்து ஓராண்டை விஞ்சுதலுமாகாது.

(4) ஓராம் உட்பிரிவின் கீழான தடுத்துவைத்தற் கட்டளை அதன் வழங்குகைக்கான காரணங்களைக் குறிப்பிடுதல் வேண்டுமென்பதுடன் பின்வரும் நோக்கங்களுள் ஏதேனும் ஒன்றுக்காக அல்லது அதற்கு மேற்பட்டவற்றுக்காக அது அவசியமாக உள்ளவிடத்து வழங்கப்படுதலும் வேண்டும்:-

(அ) சந்தேகநபர் தொடர்பிலான புலனாய்வை நடாத்துவதற்கு வசதியளிப்பதற்கு;

(ஆ) இச்சட்டத்தின்கீழான பாரதூரமான குற்றச் செயலொன்று புரியப்பட்டமை தொடர்பாகப் புலனாய்வொன்றுக்கான விடயப் பொருட்

களையும் இயல்திறச் சான்றையும் பெற்றுக் கொள்வதற்கு; அல்லது

(இ) தடுப்புக்காவலிலுள்ள சந்தேகநபரை வினவு வதற்கும்.

(5) இப்பிரிவின்கீழான தடுத்துவைத்தற் கட்டளையொன்று, 20 ஆம் பிரிவின்கீழ் இயைபான சந்தேகநபர் நீதிவானொருவர் முன்னிலைக்குக் கொணரப்படும் போதான நேரத்தில் வழங்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய தடுத்துவைத்தற் கட்டளையின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்று சோதனைக்காக நீதிவான் முன்னர் இடப்படுதல் வேண்டும்.

(6) இப்பிரிவின் கீழான தடுத்துவைத்தற் கட்டளையின் பிரதியொன்று, அத்தகைய தடுத்துவைத்தற் கட்டளை வழங்கப்பட்டதிலிருந்து எழுபத்திரெண்டு மணித்தியாலக் காலப்பகுதியினுள் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் சந்தேக நபருக்குச் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் சந்தேக நபரினாலான அதன் ஒப்புக்கொள்ளல் பெற்றுக்கொள்ளப்பட்டு இயைபான நீதிவான் நீதிமன்றத்தில் கோப்பிடப்படுதலும் வேண்டும்.

(7) தடுத்துவைத்தற் கட்டளையின் பிரதியொன்று, அத்தகைய தடுத்துவைத்தற் கட்டளை வழங்கப்பட்டதிலிருந்து ஏழு நாட்களைக் கொண்ட காலப்பகுதியொன்றினுள் சந்தேகநபரின் கிட்டிய உறவினருக்குச் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

தடுத்துவைத்தற் காலப்பகுதியை நீடித்தல்

**22.** (1) இருபதாம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட தடுத்துவைத்தற் காலப்பகுதிக்கப்பால் சந்தேகநபரொருவரைத் தடுத்து வைத்தல் அவசியமாகவுள்ளவிடத்து, அத்தகைய சந்தேக நபர், அக்காலப்பகுதி முடிவுறுவதன்மேல், 21 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட தடுத்துவைத்தற் கட்டளையுடன் சேர்த்து மேல் நீதிமன்றத்தின் முன்னிலைக்குக் கொணரப்படுதல் வேண்டுமென்பதுடன் இயைபான பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர், சட்டத்துறைத் தலைமையதிபதியினூடாக, அத்தகைய தடுத்துவைத்தற் கட்டளைக்குப் பயன்கொடுப்பதன்மூலம் அத்தகைய சந்தேகநபரின் தடுத்துவைத்தற் காலப்பகுதியை

நீடிப்பதற்கான கட்டளையொன்றுக்காக மேல் நீதி மன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

(2) தடுத்துவைத்தற் காலப்பகுதியின் நீடிப்புக்குப் பயன்கொடுக்கும் கட்டளையொன்றுக்கான விண்ணப் பத்துக்கு ஆதாரமாகச் செய்யப்பட்ட சமர்ப்பணங்களையும் தடுத்துவைத்தற் கட்டளையின் அத்தகைய நீடிப்புக்குச் சந்தேகநபரினால் அல்லது அவரது சட்டத்தரணியினால் எழுப்பப்பட்ட எவையேனும் ஆட்சேபனைகளையும் மேல் நீதிமன்றம் பதிதல் வேண்டும்.

(3) புலனாய்வுகளின் நோக்கத்துக்காகச் சமர்ப்பணங்களின் அந்தரங்கத்தன்மையைப் பேணுவதற்கானவோர் அவசியம் உள்ளவிடத்து, அது தொடர்பாக மேல் நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்று செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் மேல் நீதிமன்றம் அது தொடர்பாகத் தோதான கட்டளை யொன்றை ஆக்கலாம்.

(4) மேல் நீதிமன்றமானது (2) ஆம் உட் பிரிவின் கீழ் செய்யப்பட்ட சமர்ப்பணங்களைக் கவனத்துட் கொள்வதன் மேல்,-

(அ) தடுத்துவைத்தற் கட்டளையிற் குறித்துரைக்கப் படக்கூடியவாறான மேலதிகக் காலப்பகுதி யொன்றுக்கு அத்தகைய கட்டளைக்குப் பயன்கொடுப்பதற்கான கட்டளையொன்றை ஆக்கலாம்; அல்லது

(ஆ) அதற்கான காரணங்களைக் குறிப்பிட்டு நீடிக்கப்பட்ட தடுத்துவைத்தற் கட்டளைக்குப் பயன்கொடுப்பதற்கு மறுக்கலாம் என்பதுடன் விசாரணையின்மேல் சந்தேகநபரை விளக்க மறியலில் இடலாம் அல்லது பிணையில் விடுவிக்கலாம்.

(5) இப்பிரிவின்கீழ் வழக்குநடவடிக்கைகள், அரசியலமைப் பின் 106 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய அந்தரங்கமாக நடைபெறலாம்.

**சந்தேகநபர் பிணையில் விடுவிக்கப் படலாம்**

**23.** (1) இருபதாம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளின்கீழ் விளக்கமறியலில் இடப்பட்ட சந்தேகநபரொருவர் மேல் நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்படலாம்:

ஆயின், எவ்வாறாயினும், இச்சட்டத்தின்கீழ் ஆயுட்கால மறியற்றண்டனை அல்லது மரணதண்டனை யினால் தண்டிக்கப்படற்பாலதான பாரதூரமான குற்றச் செயலொன்றைப் புரிவதில் தொடர்புபட்ட அல்லது புரிந்துள்ள சந்தேகநபரொருவர், விதிவிலக்கான சூழ்நிலைகளில் மட்டுமே மேல் நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்படலாம்.

(2) சந்தேகநபர் ஒருவர் முதன்முதலாக விளக்கமறியலில் இடப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டை விஞ்சுகின்ற காலப்பகுதியொன்றுக்காக இச்சட்டத்தின்கீழான பாரதூர மான குற்றச்செயலொன்று தொடர்பில் விளக்கமறியலில் வைத்திருக்கப்படுதலாகாது.

(3) இரண்டாம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட காலப்பகுதியினுள் ஏதேனும் குற்றப்பகர்வு முன்வைக்கப்பட்டாவிடின், மேல் நீதிமன்றம் சந்தேகநபரைப் பிணையில் விடுவித்தல் வேண்டும்.

**மட்டுப்பாட்டுக் கட்டளைகள்**

**24.** (1) பிரதிப் பொலிசு பரிசோதகர் தலைமையதிபதியின் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள பொலிசு அலுவலரொருவரினால் செய்யப்பட்டவொரு விண்ணப்பத்தின்மேல், நீதிவானொருவர், -

(அ) ஆளொருவர் இச்சட்டத்தின்கீழான பாரதூரமான வொரு குற்றச்செயலில் ஈடுபடுகின்றார், ஈடுபட்டுள்ளார் அல்லது ஈடுபடுவதற்கு ஆயத்தஞ் செய்கின்றார் என;

(ஆ) அத்தகைய ஆள் அத்தகைய பாரதூரமான குற்றச்செயலைப் புரிவதற்கான அல்லது புரிவதனை வசதிப்படுத்துவதற்கான நம்பக மானதும் பாரதூரமானதுமான ஆபத்தை ஏற்படுத்துகின்றார் என; அத்துடன்

(இ) அத்தகைய பாரதூரமான குற்றச்செயலின் புரிகையைத் தடுக்கும் நோக்கத்துக்காக மட்டுப்பாட்டுக் கட்டளையொன்றை ஆக்குதல் அவசியமாகவுள்ளது மற்றும் குறைந்த மட்டுப்பாட்டு வழிமுறைகள் பயனுள்ளனவாக இருக்கமாட்டாது என,

அவரின்முன்னர் இடப்பட்ட விடயப்பொருட்களின் அடிப்படையில் திருப்திப்படுமிடத்து, நீதிவானானவர், சூழ்நிலைகளில் அவசியமானவாறானவையும் விகிதாசாரப் படியானவையுமான அத்தகைய நிபந்தனைகளை விதிக்கின்ற மட்டுப்பாட்டுக் கட்டளையொன்றை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்றை ஆக்குவதாவென்பதைத் தீர்மானிப்பதில், நீதிவான் பின்வருவனவற்றைக் கருத்திற்கொள்ளுதல் வேண்டும்:-

(அ) உத்தேசிக்கப்பட்ட ஒவ்வொரு மட்டுப்பாட்டினதும் அவசியமும் விகிதாசாரத்தன்மையும்;

(ஆ) ஏற்படுத்தப்பட்ட ஆபத்தின் தன்மையும் பாரதூரமானதன்மையும்;

(இ) சம்பந்தப்பட்ட ஆளின் அடிப்படை உரிமைகளும் சுதந்திரங்களும்மீது உத்தேசிக்கப்பட்ட மட்டுப் பாடுகளின் சாத்தியமான தாக்கம்; அத்துடன்

(ஈ) மேற்பார்வை, கண்காணிப்பு அல்லது அறிக்கையிடுதல் தேவைப்பாடுகள் உட்பட, குறிக்கோளைக் குறைவான தலையிடும் வழிமுறைகளின்மூலம் எய்தமுடியுமாவென்பது.

(3) பின்வருவன உட்பட, மட்டுப்பாட்டுக் கட்டளை யொன்று, (1) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்குக் கண்டிப்பாக அவசியமானவாறான அத்தகைய வழிமுறைகளை மட்டுமே விதிக்கலாம்:-

(அ) குறித்துரைக்கப்பட்ட இடங்களுக்கான அல்லது இடப்பரப்புகளுக்கான பயணத்தின்மீதான மட்டுப்பாடுகள்;

(ஆ) குறித்துரைக்கப்பட்ட காலஇடைவெளிகளில் ஒரு குறித்துரைக்கப்பட்ட பொலிசு நிலையத்திற்கு வருகைதருவதற்கான தேவைப்பாடுகள்;

(இ) இச்சட்டத்தின்கீழான பாரதூரமான குற்றச் செயலொன்றுடன் சம்பந்தப் பட்டவர்களென அல்லது சம்பந்தப்பட்டவையென நியாயமான முறையில் நம்பப்படும் குறித்துரைக்கப்பட்ட ஆட்களுடன் அல்லது உருவகங்களுடன் தொடர்பாடுவதன்மீதான அல்லது ஒருங்கு சேர்வதன் மீதான மட்டுப்பாடுகள்; அல்லது

(ஈ) நீதிவான் அவசியமானவையும் விகிதாசாரப்படி யானவையும் எனக் கருதுகின்றவாறான அத்தகைய வேறு வரையறுக்கப்பட்ட நிபந்தனைகள்.

(4) மட்டுப்பாட்டுக் கட்டளையெதுவும் –

(அ) அடையாளங்காணப்பட்ட ஆபத்துக்குக் கண்டிப்பாக அவசியமான மற்றும் விகிதாசாரப் படியான அளவுவரைதவிர, நடமாட்டம், பேச்சு, ஒன்றுகூடல் அல்லது ஒருங்குசேர்வதன்மீது பொதுவான தடையொன்றை விதித்தலாகாது; அல்லது

(ஆ) ஒரு பொதுவான புலனாய்வை வசதிப்படுத்தும் அல்லது அதற்குத் உதவிபுரியும் நோக்கத்துக்காக மட்டுமே செய்யப்படுதலாகாது.

(5) ஒவ்வொரு மட்டுப்பாட்டுக் கட்டளையும் –

(அ) ஒருதடவையில் மூன்றுமாதங்களை விஞ்சாத வொரு காலப்பகுதிக்காக ஆக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) கட்டளைக்கான காரணங்களையும் அது எந்த முக்கியமான ஏதுக்களின் அடிப்படையிலானதோ அந்த முக்கியமான ஏதுக்களையும் குறித்துரைத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) பாதிக்கப்பட்ட ஆளினாலான விண்ணப்பத்தின் மேல் நீதிவானினால் பரிசீலனைக்கு அமைந் ததாதல் வேண்டும்.

(6) கட்டளையானது மறுதிறத்தவரின்றியதாக இருப்பதனை அவசரமான சூழ்நிலைகள் தேவைப்படுத்துகின்றனவென நீதிவான், பதியப்பட்ட காரணங்களுக்காகத் தீர்மானித்தா லொழிய, எந்த ஆளுக்கெதிராக மட்டுப்பாட்டுக் கட்டளையொன்று நாடப்படுகின்றதோ அந்த ஆளுக்கு, கேட்கப்படுவதற்கும் ஒரு சட்டத்தரணியினால் பிரதிநிதித் துவப்படுத்துவதற்கும் நியாயமான வாய்ப்பொன்று அளிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய பட்சத்தில், இயன்றளவு முன்கூட்டிய நேரத்தில் கேட்கப்படுவதற்கு அவ்வாளுக்கு வாய்ப்பொன்று அளிக்கப்படுதலும் வேண்டும்.

(7) ஒரு மட்டுப்பாட்டுக் கட்டளையினால் இன்னலுறும் எவரேனுமாள் அத்தகைய கட்டளையின் மீளாய்வுக்காக அல்லது நீதிமுறைப் பரிசீலனைக்காக மேல் நீதிமன்றத்துக்கு அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

(8) மட்டுப்பாட்டுக் கட்டளையொன்று இல்லாதொழிக் கப்படுமிடத்து அல்லது நியாயமான ஏதுக்களின்றி ஆக்கப் பட்டதாகக் கண்டுப்பிடிக்கப்படுமிடத்து, பாதிக்கப்பட்ட ஆள் சட்டத்துக்கிணங்கத் தோதான நிவாரணத்தை நாடுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

விளக்கமறியல் கட்டுக்காப்பின் போதான தடுப்புக்காவல்

**25.** இச்சட்டத்தின்கீழான ஏதேனும் பாரதூரமான குற்றச்செயலுக்காக அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழான ஏதேனும் தவறுக்காக விளக்கமறியலில் கட்டுக்காப்பிலுள்ள எவரேனுமாள் –

(அ) இச்சட்டத்தின்கீழான பாரதூரமானவொரு குற்றச் செயலைப் புரிந்துள்ளாரென;

(ஆ) இச்சட்டத்தின்கீழான பாரதூரமானவொரு குற்றச்செயலைப் புரிவதற்கு எத்தனித் துள்ளாரென, உடந்தையளித்துள்ளாரென அல்லது சதிசெய்துள்ளாரென அல்லது

இச்சட்டத்தின்கீழான பாரதூரமானவொரு குற்றச்செயலைப் புரிவதற்கு ஆயத்தநிலையான ஏதேனும் செயலைச் செய்துள்ளாரென; அல்லது

(இ) கைதுசெய்யப்படுமுன்னர் இச்சட்டத்தின் கீழான பாரதூரமானவொரு குற்றச் செயலைப் புரிந்திருந்தாரென மற்றும் பொலிசு நிலையமொன்றுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் அத்தகைய நிகழ்வுபற்றி அறிந்திருக்க வில்லையென

ஒரு பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் நம்பத்தகு தகவல்களைப் பெறுமிடத்து, பொலிசு நிலையமொன்றுக்குப் பொறுப்பாகவுள்ள அத்தகைய அலுவலர் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு அத்தகைய தகவல்களை அறிக்கையிடுதல் வேண்டும்.

(2) மேல் நீதிமன்ற நீதிபதியொருவர், சட்டத் துறைத் தலைமையதிபதியினால் செய்யப்பட்ட விண்ணப்ப மொன்றின்மீது அத்தகைய தகவல்கள்பற்றி உடனடியாக விசாரணைசெய்தல் வேண்டுமென்பதுடன் விசாரணை முடிவுற்றதன்மீது சந்தேகநபருக்கெதிரான சார்த்துதல் நன்கு திடமானதாகவிருக்கின்றதாகத் தோன்றுகின்றதென அவர் திருப்திப்படின், மற்றும் மேலதிகப் புலனாய்வுக்காகச் சந்தேகநபரைத் தடுப்புக்காவலில் வைத்திருப்பது உசிதமானதென அவர் கருதுகின்றவிடத்து, அவர் தடுத்துவைத்தற் கட்டளையொன்று முன்னிலைக்குக் கொணரப்பட்டதன்மீது, தடுத்துவைத்தற் கட்டளைக்குப் பயன்கொடுப்பதற்கான கட்டளையொன்றை ஆக்கலா மென்பதுடன் பின்வருமாறு செய்வதற்குப் பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு அனுமதியளிக்கலாம்:-

(அ) சந்தேகநபரின் கட்டுக்காப்பை அத்தகைய பொலிசு நிலையத்திற்குக் கைமாற்றுவதற்கும்;

(ஆ) விளக்கமறியல் கட்டுக்காப்பிலிருந்து சந்தேக நபரை அகற்றுவதற்கும்;

(இ) அத்தகைய தடுத்துவைத்தற் கட்டளையின் நியதிகளின்படி அத்தகைய சந்தேகநபரைத் தடுத்துவைக்கச் செய்வதற்கும்; அத்துடன்

(ஈ) சந்தேகநபர் தனிமைப்படுத்தலில் அல்லது பாதுகாப்பின்கீழ் வைத்திருக்கப்படுதல் வேண்டுமெனக் கட்டளையிடுவதற்கும்.

(3) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட தடுத்துவைத்தற் கட்டளையானது –

(அ) செயலாளரினால் வழங்கப்படுதல் வேண்டும்;

(ஆ) ஆறுமாதங்களை விஞ்சாதவோர் ஒன்றுதிரண்ட காலப்பகுதிக்காக ஒருதடவையில் இருவாரங் களைக்கொண்டவொரு காலப்பகுதிக்காக இருத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) ஒவ்வொரு பதினான்கு நாட்களும் மேல் நீதிமன்றத்தினால் பரிசீலனைசெய்யப்படுதல் வேண்டும்.

(4) சந்தேகநபர் விளக்கமறியல் கட்டுக்காப்பிலிருந்து தடுப்புக்காவலுக்கு கைமாற்றப்பட்டதனை மேல் நீதிமன்றம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அறிவித்தல் வேண்டும்.

(5) விளக்கமறியல் கட்டுக்காப்பிலிருந்த ஆளொருவரினால் இச்சட்டத்தின்கீழ் தடுப்புக்காவலில் செலவிடப்பட்ட காலப்பகுதியானது, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 203 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக அவரது விளக்கமறியல் காலப்பகுதியின் பாகமாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) ஆறு மாதங்களைக்கொண்ட காலப்பகுதி பூர்த்தி செய்யப்படுவதன்மேல் அல்லது புலனாய்வுகள் அதற்குமுன்னர் எந்நேரத்திலும் முடிவுற்றுள்ளனவெனச் சட்டத்துறைத் தலைமையதிபதி மேல் நீதிமன்றத்துக்கு அறிவித்தால்,

மேல் நீதிமன்றம் சந்தேகநபரை மீண்டும் விளக்கமறியல் கட்டுக்காப்பிற்கு பாரப்படுத்தி கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும்.

விளக்க மறியலில் அல்லது தடுப்புக் காவலில் உள்ள சந்தேகநபர் சட்டத்தரணி யொருவருக்கான அணுக்கத்தைக் கொண்டிருத்தல்

**26.** இச்சட்டத்தின்கீழ்விளக்கமறியலில்இடப்பட்டஅல்லது தடுத்துவைக்கப்பட்ட சந்தேகநபர் ஒருவர், எழுத்திலான சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, அவரது உறவினர்களுடன், சட்டத்தரணியுடன் அல்லது அவர் விரும்பிய வேறெவரேனுமாளுடன் தொடர்புகொள்வதற்கும் அவர்களினால் வருகைதரப்படுவதற்கும் உரிமை கொண்டிருத்தல் வேண்டும்.

விளக்கம் முடிவுறும் வரையிலான தடுப்புக்காவல்

**27.** (1) (அ) விளக்கமறியல் கட்டுக்காப்பிலுள்ள எவ்வாளுக் கெதிராக இச்சட்டத்தின்கீழான குற்றப் பகர்வொன்று முன்வைக்கப்பட்டுள்ளதோ அவ்வாள் ஒருவர், தேசியப் பந்தோபஸ்தின் அல்லது பொதுமக்கள் ஒழுங்கமைதியின் நலன்கருதி அல்லது விளக்கம் முடிவுறாதிருக்கும்போது குற்றஞ்சாட்டப்பட்டவரின் உயிருக்கான பாரதூரமான தீங்குபற்றிய அச்சுறுத்தலொன்று அல்லது அஞ்சுதலொன்று உள்ளவிடத்து ஏதேனும் சட்டமுறையான அதிகாரியின் கட்டுக்காப்பில் வைத்திருக் கப்படுவது அவசியமானதாகவுள்ளதென அல்லது உசிதமான தாகவுள்ளதெனச் செயலாளர் அபிப்பிராயப்படின், அவர், ஒரு தடுத்துவைத்தற் கட்டளை வழங்கப்படுவதனை அவசியமாக்குகின்ற காரணங்களை எடுத்துக்கூறி விளக்கம் முடிவுறும்வரை குற்றஞ்சாட்டப்பட்டவரைத் தடுத்துவைப்பதற்கான தடுத்துவைத்தற் கட்டளையின் பிரதியொன்றுடன் சேர்த்து இயைபான மேல் நீதி மன்றத்துக்குச் சட்டத்துறைத் தலைமையதிபதியினூடாக விண்ணப்பமொன்றைச் செய்யலாம் என்பதுடன் அத்தகைய விண்ணப்பத்தையும் அதற்கான ஆட்சேபனைகளையும் கேட்டபின்னர், மேல் நீதிமன்றம், ஒரு நியாயமான விளக்கம் நடாத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கான அத்தகைய பணிப்புகளுக்கமைய, தடுத்துவைத்தற் கட்டளைக்குப் பயன்கொடுப்பதற்கான கட்டளையொன்றை ஆக்கலாம்.

(ஆ) இருபத்தோராம் பிரிவின் (1) ஆம், (2) ஆம் (6) ஆம் மற்றும் (7) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், பந்தி (அ) வின்கீழ் வழங்கப்பட்ட தடுத்துவைத்தற் கட்டளை தொடர்பாக ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவைப் பின்பற்றி ஆக்கப்பட்ட தடுத்துவைத்தற்கட்டளைமறியற்சாலைகள்ஆணையாளருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட அதிகாரிக்கு அத்தகைய ஆளின் கட்டுக்காப்பை ஒப்படைத்தல் மறியற்சாலைகள் ஆணையாளரின் கடமையாதலும் வேண்டும்; அத்துடன் (54 ஆம் அத்தியாயமான) மறியற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய ஆளின் கட்டுக்காப்பு தொடர்பாக ஏற்புடையனவாகாதொழிதலும் வேண்டும்.

விசேட புலனாய்வுசார் தொழினுட்பங் களுக்கான நீதிமுறை அதிகாரவளிப்பு

**28.** (1) உபபொலிசுப் பரிசோதகரின் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள பொலிசு அலுவலரொருவர் பின்வரும் விசேட புலனாய்வுசார் தொழினுட்பங்களை நடாத்துவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) கட்டுப்படுத்தப்பட்ட ஒப்படைப்பு;

(ஆ) எண்ணிம, குரலொலி மற்றும் காணொளித் தொடர்பாடலை இடைமறித்தலையும் பதிதலையும் உட்படுத்துகின்ற எண்ணிம மேற்பார்வை;

(இ) கவர்வோரைப் பயன்படுத்துவதனை உட்படுத்து கின்றவையுட்பட மறைமுகமான தொழிற் பாடுகள்;

(ஈ) பொறிகளை இடுதல்; அத்துடன்

(உ) கணனிகள், செல்லிடத் தொலைபேசிகள், எண்ணிமத் தரவுகளின் தேக்க உபாயங்கள் மற்றும் வேறு எண்ணிமச் சாதனங்களிலிருந்து தரவுகளினதும், தகவல்களினதும், உருவங் களினதும் தடயவியல்சார் பிரித்தெடுப்பு:

ஆயின், உபபொலிசுப் பரிசோதகர் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள பொலிசு அலுவலரொருவர் மேற்குறிப்பிடப்பட்ட தத்துவங்களின் எவற்றினதும் பிரயோகத்தை அதிகாரமளிக்கின்ற கட்டளையொன்றுக்கென நீதிவான் நீதிமன்றத்துக்கு போதுமான விடயப்பொருளுடன்

சேர்த்து அந்தரங்கமாக மறுதிறத்தவரின்றிய விண்ணப்ப மொன்றைச் செய்யலாம்.

(2) உபபொலிசுப் பரிசோதகர் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள பொலிசு அலுவலரொரிவரிடமிருந்து மேற்கூறப்பட்டவாறான விண்ணப்பமொன்றைப் பெற்றதன் மேல், நீதிவானானவர், தாமதமின்றி, சொல்லப்பட்ட விண்ணப்பத்தைக் கவனத்திட்கொள்ளுதல் வேண்டு மென்பதுடன் திருப்திப்படுவதன்மேல், அவசியமான விசேட புலனாய்வுகளின் நடாத்துகைக்கான அதிகாரவளிப்பை வழங்குதலும் வேண்டும். அவசியமானவிடத்து, நீதிவான், நீதிநலன்கருதி, இணங்கியொழுகப்படவேண்டிய நிபந்தனை களை விதிக்கலாம்.

(3) நீதிவானவர், விசேட புலனாய்வுசார் தொழினுட்ப மொன்றை நடாத்துவதற்கான அதிகாரவளிப்பை வழங்கு முன்னர், அத்தகைய புலனாய்வுசார் தொழினுட்பம் நிறைவேற்றப்படுவதற்கான விகிதாசாரத்தன்மை கோட் பாட்டின் அடிப்படையில் அதனை நடாத்துவதற்கான அவசியத்தையும் நியாயப்படுத்துகையையும் கவனத்துட் கொள்ளுதல் வேண்டும்.

(4) மேலே குறிப்பீடுசெய்யப்பட்டவாறு அதிகாரவளிப்பைப் பெற்றுக்கொண்டதனையடுத்து, உபபொலிசுப் பரிசோதகரின் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள பொலிசு அலுவலர், பதினான்கு நாட்களுக்கு ஒரு தடவை, எந்த விசேட புலனாய்வுசார் தொழினுட்பங்களுக்காக அதிகாரவளிப்பு பெற்றுக்கொள்ளப்பட்டதோ அந்த விசேட புலனாய்வுசார் தொழினுட்பங்களைப் பயன்படுத்தி அத்தகைய புலனாய்வின் முன்னேற்றத்தை இயைபான நீதிவானுக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

கூட்டுப் புலனாய்வுகள்

**29.** (1) இலங்கைக்கு வெளியே புரியப்பட்ட தவறொன்று சம்பந்தமாக இலங்கையினுள் இச்சட்டத்தின்கீழான பாரதூரமானவொரு குற்றச்செயலொன்று புரியப் பட்டுள்ளதாக அல்லது புரியப்படவுள்ளதாகச் சந்தேகிக்கப் படுமிடத்து, பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி, சட்டத்துறைத் தலைமையதிபதியின் ஒருப்பாட்டுடனும் அத்தகைய அரசின் தகுதிவாய்ந்த அதிகாரிகளுடன்

உடன்பட்டுக் கொள்ளப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமையவும், அத்தகைய அதிகாரிகளுடன் ஒரு கூட்டுப் புலனாய்வு நடாத்தப்படுவதற்கு அதிகாரமளிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட வொரு கூட்டுப் புலனாய்வு –

(அ) வெளிநாட்டரசின் தகுதிவாய்ந்த அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் இலங்கையினுள், அல்லது

(ஆ) பரஸ்பரமாக உடன்பட்டுக்கொள்ளப்படக் கூடிய வாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக் கிணங்க, பகுதியளவில் இலங்கையிலும் பகுதி யளவில் அவ்வெளிநாட்டரசின் ஆள் புலத்திலும்

நடாத்தப்படலாம்.

(3) ஒரு கூட்டுப் புலனாய்வை நடாத்துவதில், இலங்கையின் சட்ட வலுவுறுத்துகை அதிகாரிகள் இலங்கைச் சட்டங்களுக்கமையவிருத்தல் வேண்டுமென்பதுடன் இப் பிரிவிலுள்ளதெதுவும், ஒரு வெளிநாட்டரசின் சட்டங் களுக்கிணங்கவன்றி அவ்வரசின் ஆள்புலத்தில் புலனாய்வுசார் தத்துவங்கள் பிரயோகிக்கப்படுவதனை அனுமதிப்பதாகப் பொருளமைத்துக்கொள்ளப்படுதலுமாகாது

நீதிவான் நீதி மன்றத்தின் முன்னரான வழக்கு நடவடிக்கைகள்

**30.** குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின்கீழானபாரதூரமானவொருகுற்றச்செயலுக்காக நீதிவானொருவர் முன்னிலைக்குக் கொணரப்பட்டுள்ள இச்சட்டத்தின்கீழான எவரேனும் சந்தேகநபர் தொடர்பிலான புலனாய்வும் வழக்கு நடவடிக்கைகளும் அதே நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெறுதல் வேண்டும்.

பாரதூரமான குற்றச்செய லொன்று பிடியாணை யின்றிக் கைதுசெய்யத் தக்கதாக இருத்தலும் மேல்நீதிமன்றம் இச்சட்டத்தின் கீழான தவறுகளை விளங்குதலும்

**31.** (1) இச்சட்த்தின்கீழான ஏதேனும் பாரதூரமான குற்றச்செயல்குற்றவியல்நடவடிக்கைமுறைச்சட்டக்கோவைச் சட்டத்தின் கருத்துக்குட்பட பிடியாணையின்றிக் கைது செய்தகு தவறொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) மேல்நீதிமன்றம், வேறேதேனும் சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின்கீழான பாரதூரமான குற்றச்செயலைக் கேட்டு, விளங்கி, அதற்குத் தண்டனை யளிப்பதற்குப் புறநீங்கலான நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**32.** (1) இச்சட்டத்தின்கீழான ஏதேனும் பாரதூரமான குற்றச்செயல், இச்சட்டத்தினதும் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தினதும் ஏற்பாடுகளின் நியதிகளின்படி புலனாய்வு செய்யப்பட்டு, அதற்கெதிராகக் குற்றவழக்குத் தொடுக்கப்பட்டு, அதற்குத் தண்டனையளிக்கப்படுதல் வேண்டும்.

குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்புடைமை

(2) குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 115 ஆம், 116 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் இச்சட்டத்தின்கீழானவொரு சந்தேகநபர் தொடர்பாக ஏற்புடைமையெதனையும் கொண்டிருத்தலாகாது.

(3) குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அச்சட்டத்தின் 306 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், இச்சட்டத்தின்கீழான ஏதேனும் பாரதூரமான குற்றச்செயலுக்கு ஏதேனும் நீதிமன்றத்தின்முன்னர் குற்றவாளியாக வழக்குரைக்கின்ற அல்லது அதனால் குற்றவாளியாகக் காணப்படுகின்ற எவரேனுமாளின் விடயத்தில் ஏற்புடையனவாதலாகாது.

(4) இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகள் இச்சட்டத்தின்கீழான ஏதேனும் சட்ட வழக்குநடவடிக்கைக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

**33.** இச்சட்டத்தின்கீழ் புரியப்பட்ட ஏதேனும் பாரதூரமான குற்றச்செயலுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல் தொடர்பான ஏதேனும் புலனாய்வுக்கும் அது தொடர்பாகவும் 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல்கள் சட்டத்தின் ஏற்புடைமை

**34.** வேறேதேனும் சட்டத்தில் எது எவ்வாறிருப் பினும், இச்சட்டத்தின்கீழான பாரதூரமான குற்றச் செயலொன்றுக்கான குற்றவழக்குத்தொடுப்புக்கான உரிமை ஏதேனும் கால எல்லையினால் தடை செய்யப்படுதலாகாது.

குற்றவழக்குத் தொடுப்பு கால எல்லையினால் தடைசெய்யப் படுதலாகாது

பொருள் கோடல்

**35.** இப்பாகத்தில், "செயலாளர்" என்பது, அரசியலமைப்பின் 44 ஆம் அல்லது 45 ஆம் உறுப்புரையின்கீழ் இலங்கைப் பொலிசுப் படை என்ற விடயம் எவ்வமைச்சருக்குக் குறித்தளிக்கப்படுகின்றதோ அவ்வமைச்சரின் அமைச்சுச் செயலாளர் என்று பொருளாகும்.

## பாகம் III

## பொலிசு அலுவலரொருவருக்குள்ள தத்துவங்கள்

இச்சட்டத்தின் கீழ் பொலிசு அலுவலரொருவருக்குள்ள தத்துவங்கள்

**36.** இச்சட்டத்தின்கீழான பாரதூரமான குற்றச் செயலையும் அதே கொடுக்கல் வாங்கலின்போது புரியப்பட்டிருக்கக்கூடிய வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழான தவறொன்றையும் புலனாய்வு ஒன்றை நடாத்தும் அல்லது ஏதேனும் அத்தகைய பாரதூரமான குற்றச்செயல் மற்றும் தவறின் புரிகையை தடுக்கும் நோக்கத்திற்கென, (53 ஆம் அத்தியாயமான) பொலிசுக் கட்டளைச்சட்டத்தினால் அல்லது குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தினால் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினால் பொலிசு அலுவலரொருவருக்கு அளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்துடன் சேர்த்து மேலதிகமாக, இச்சட்டத்தின்கீழான மற்றும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழான பாரதூரமான குற்றச்செயல்களையும் வேறு தவறுகளையும் புலனாய்வு செய்யவும் தடுப்பதற்காகவும் அவசியமாகக்கூடிய அளவுவரை, இப்பாகத்திற் குறித்துரைக்கப்பட்ட தத்துவங்கள் அவருக்குறித்தாக்கப்படுதல் வேண்டும்.

இச்சட்டத்தின் கீழான பாரதூரமான குற்றச் செயலொன்று புரியப் படுவதனைத் தடுப்பதற்குப் பொலிசு அலுவலருக் குள்ள கடமை

**37.** (1) இச்சட்டத்தின்கீழான பாரதூரமான குற்றச் செயலொன்று புரியப்படுவதனைத் தடுப்பதற்கு, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, தோதானதாகவிருக்கக் கூடியவாறான ஏதேனும் வழிமுறையை எடுப்பது ஒவ்வொரு பொலிசு அலுவலரினதும் கடமையாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்துக்காக, அத்தகைய எவரேனும் அலுவலர் –

(அ) நல்லெண்ணத்துடன்;

(ஆ) புரியப்பட்டுள்ளதாகச் சார்த்தப்பட்ட பாரதூரமான குற்றச்செயல் புரியப்படுகின்றமையினால் விளை விக்கப்படக்கூடிய தீங்குக்கு விகிதாசாரப்படியும்; அத்துடன்

(இ) இச்சட்டத்தின்கீழான பாரதூரமானவொரு குற்றச்செயல் புரியப்படுவதனைத் தடுப்பதற்கு அல்லது இச்சட்டத்தின்கீழான பாரதூரமான குற்றச்செயலொன்றைப் புரிந்துள்ள ஆட்களைப் பற்றுகின்ற நோக்கத்துக்காக அத்தகைய வழிமுறைகள் அவசியமாகக்கூடிய அளவுவரை மட்டும்,

அத்தகைய வழிமுறைகளை எடுக்கலாம்.

ஒரு வாகனம் அல்லது கலம் முதலியன வற்றை நிறுத்துவதற்கு வலோத்காரத் தைப் பயன் படுத்துதல்

**38.** ஏதேனும் வாகனம், கலன், புகையிரதம், வானூர்தி அல்லது ஆளில்லா வான்வழி வாகனத்துக்குப் பொறுப்பாகவுள்ள ஆள், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அத்தகைய ஏதேனும் வாகனத்தை, கலத்தை, புகையிரதத்தை, வானூர்தியை அல்லது ஆளில்லா வான்வழி வாகனத்தை நிறுத்துவதற்காக ஒரு பொலிசு அலுவலரினால் விடுக்கப்பட்ட ஏதேனும் பணிப்புரைக்குக் கீழ்ப்படியாதிருக்குமிடத்து, அத்தகைய பொலிசு அலுவலர் அத்தகைய வாகனத்தை, கலத்தை, புகையிரதத்தை, வானூர்தியை அல்லது ஆளில்லா வான்வழி வாகனத்தை நிறுத்துவதற்கு அவசிய மாகக் கூடியவாறான அத்தகைய வலோத்காரத்தைப் பயன்படுத்தலாம்:

ஆயின், எவ்வாறாயினும், வாகனத்தை, கலத்தை, புகையிரதத்தை, வானூர்தியை அல்லது ஆளில்லா வான்வழி வாகனத்தை நிறுத்துவதற்கான வேறெல்லா வழிவகைகளும் தோல்வியடைந்துள்ளவிடத்து மட்டுமே அத்தகைய ஏதேனும் வலோத்காரம் பயன்படுத்தப்படலாம்.

ஏதேனும் வாகனம், அல்லது கலன் முதலியவற்றின் கட்டுப் பாட்டைக் கையேற்றல்

**39.** (1) இச்சட்டத்தின்கீழானவொரு புலனாய்வை நடாத்தும் நோக்கத்துக்காக அல்லது ஒரு பாரதூரமான குற்றச்செயல் புரியப்படுவதனைத் தடுப்பதற்காக, புரியப்பட்டுள்ளதாகச் சார்த்தப்பட்ட பாரதூரமான குற்றச்செயலுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் வாகனம், கலன், புகையிரதம், வானூர்தி அல்லது ஆளில்லா வான்வழி வாகனத்தின் கட்டுப்பாட்டைப் பொலிசு அலுவலரொருவர் கையேற்றல் வேண்டும்.

(2) அத்தகைய கட்டுப்பாட்டினுள் எடுத்தல் நீதிவானொருவருக்கு உடனடியாக அறிக்கையிடப்படுதல் வேண்டும்.

ஒரு கலன் அல்லது வானூர்தி முதலியன புறப்பட்டுச் செல்வதனை அல்லது கடலுக்குச் செல்வதனை இடை நிறுத்துதல் அல்லது தாமதித்தல்

**40.** (1) இச்சட்டத்தின் நோக்கத்துக்காக, பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள பொலிசு அலுவலரொருவர், பின்வருவனவற்றைப் பணிக்கின்ற கட்டளையொன்றுக்காக ஏதேனும் வானூர்தி அல்லது கலன் இருக்கின்ற இடப்பரப்பினுள் நியாயாதிக்கங்கொண்டுள்ள நீதிவான் நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்:-

(அ) நாற்பத்தெட்டு மணித்தியாலங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு, அத்தகைய வானூர்தி புறப்பட்டுச் செல்வதனை அல்லது ஏதேனும் கலன் கடலுக்குச் செல்வதனை இடைநிறுத்துவதற்கு அல்லது தாமதிப்பதற்கும்;

(ஆ) அத்தகைய ஏதேனும் வானூர்தியை பெயர் குறிக்கப்பட்டவொரு விமானநிலையத்தில் அல்லது வேறேதேனும் தோதான இடத்தில் தரையிறக்குவதற்கும்; அல்லது

(இ) ஏதேனும் கலத்தை ஏதேனும் கப்பற்றுறைக்கு அல்லது துறைமுகத்துக்கு அல்லது வேறேதேனும் தோதான இடத்துக்குக் கொண்டுவருவதற்கும்;

அத்துடன் நீதிவான், அத்தகைய விண்ணப்பத்தைக் கவனத்துட்கொண்டதன்மேல், அதன்கண் குறித்துரைக்கப் படக்கூடியவாறான ஏதேனும் நிபந்தனைக்கமைய, அத்தகைய கட்டளையை வழங்கலாம்.

(2) இரண்டாயிரத்து இரண்டாமாண்டின் 34 ஆம் இலக்க, குடியியல் வான்செலவு அதிகாரசபை சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட குடியியல் வான்செலவுப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு, வான்பாதுகாப்பு விடுவிப்பைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துக்காக ஏதேனும் வானூர்தி தொடர்பில் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் கட்டளைபற்றித் தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

அரசாங்கப் பகுப்பாய்வாளரொருவருக்கு அல்லது வேறு நிபுணருக்கு பொருட்களை நேரடியாகச் சமர்ப்பித்தல்

**41.** (1) பொலிசு நிலையமொன்றுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரொருவர், ஒரு பாரதூரமான குற்றச்செயலைப் புரிந்தமையுடன் சம்பந்தப்பட்டதென அவர் நியாயமான முறையில் நம்புகின்ற ஏதேனும் ஆவணத்தை, வஸ்துவை அல்லது பொருளைப் பரிசோதனைக்காகவும் பகுப் பாய்வுக்காகவும் அரசாங்கப் பகுப்பாய்வாளருக்கு அல்லது வேறேதேனும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிபுணருக்கு நேரடியாகச் சமர்ப்பிக்கலாம்.

(2) பரிசோதனைபற்றிய அறிக்கையானது, சந்தேகநபர் எந்நீதிவான் முன்னிலைக்குக் கொணரப்பட்டாரோ அல்லது கொணரப்படவுள்ளாரோ அந்நீதிவானுக்கான பிரதியொன்றுடன், இயைபான பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு அரசாங்கப் பகுப்பாய் வாளரினால் அல்லது வேறு நிபுணரினால் நேரடியாகச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

புலனாய்வுக்காக விடயப் பொருட்களைக் கைமாற்றுதல்

**42.** (1) இச்சட்டத்தின்கீழானவொரு பாரதூரமான குற்றச்செயல் தொடர்பில் புலனாய்வொன்றை நடாத்து கின்ற பொலிசு அலுவலரொருவர், புரியப்பட்ட அப் பாரதூரமான குற்றச்செயல் வேறேதேனும் சட்ட வலுவுறுத்துகை முகவராண்மையின் புலனாய்வுசார் தகுதியின் நோக்கெல்லையின்கீழ் அடங்குகின்றதெனச் சுட்டிக்காட்டுகின்ற விடயப்பொருட்கள் உள்ளனவென அவர் கருத்துக்கொண்டால், அத்தகைய வேறு சட்ட வலுவுறுத்துகை முகவராண்மைக்குப் புலனாய்வுக்கான விடயப்பொருட்களைச் சமர்ப்பிப்பது அவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட சட்ட வலுவுறுத்துகை முகவராண்மை வேறேதேனும் இறைமைகொண்ட நாட்டின் முகவராண்மையொன்றை உள்ளடக்கலாம்.

வங்கி, நிதிநிறுவனம் முதலிய வற்றிலிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்ளுதல்

**43.** (1) இயைபான பொலிசு நிலையமொன்றிற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர், 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச் சட்டத்தினதும், 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, பின்வரும் தகவல்களையும் விடயப்பொருட்களையும் அத்தகைய அலுவலருக்கு வழங்கும்படி ஏதேனும் வங்கியை, வங்கித்தொழில்சாரா நிதிசார் நிறுவனத்தை அல்லது

பெயர்குறிக்கப்பட்ட நிதிசாராத் தொழிலைத் தேவைப் படுத்துவதற்கு ஒரு நீதிவானிடமிருந்தான கட்டளை யொன்றுக்காக விண்ணப்பிக்கலாம்:-

(அ) எவரேனுமாளுக்கு அத்தகைய வங்கியினால், நிறுவனத்தினால் அல்லது தொழிலினால் வழங்கப்பட்ட ஏதேனும் நிதிசார் சேவை தொடர்பான தகவல்கள்;

(ஆ) எவரேனுமாளினால் நிறைவேற்றப்பட்ட ஏதேனும் நிதிசார் கொடுக்கல்வாங்கல் பற்றிய விபரங்கள்;

(இ) வங்கிக்கணக்குகள், வைப்புக்கள், அனுப்புகைகள் மற்றும் மீளப்பெறுகைகள் மற்றும் அத்தகைய ஏதேனும் வங்கியினால், நிறுவனத்தினால் அல்லது தொழிலினால் வழங்கப்பட்ட நிதிசார் சேவைகள் என்பன தொடர்பான விபரங்கள்;

(ஈ) எவரேனுமாளினால் நிதிசார் சேவைகள் பெறப்படுதல் தொடர்பான விபரங்கள்; அத்துடன்

(உ) ஏதேனும் கணக்கு அல்லது கொடுக்கல்வாங்கல் தொடர்பில் ஏதேனும் கணக்கு அல்லது வேறு தகவல்கள் பற்றிய சான்றுப்படுத்தப்பட்ட கூற்றொன்று:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய பொலிசு அலுவலர், இச்சட்டத்தின்கீழான பாரதூரமானவொரு குற்றச்செயலைப் புரிவதில் எவரேனுமாளுக்கெதிராகச் சந்தேகத்துக்கான நியாயமான ஏதுக்கள் இருந்தால் மட்டுமே இச்சட்டத்தின்கீழான கட்டளையொன்றுக்காக விண்ணப்பிக்கலாம்.

(2) நீதிவான், அத்தகைய பொலிசு அலுவலரினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தைக் கவனத்துட்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் அது புலனாய்வொன்றை நடாத்து வதற்காக நியாயமாகவும் அவசியமாகவும் தோன்றுமிடத்து, (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படியான கட்டளையொன்றை ஆக்குதலும் வேண்டும்.

(3) நீதிவான், விண்ணப்பம் தொடர்பில் இரகசியத் தன்மையைப் பேணுதல் வேண்டுமென்பதுடன் அது தொடர்பிலான வழங்குநடவடிக்கைகள், அரசியலமைப்பின் 106 ஆம் உறுப்புரைக்கமைய, அத்தகைய பொலிசு அலுவலரினால் கோரப்படின் அந்தரங்கமாக நடைபெறுதலும் வேண்டும்.

சேவை வழங்குநரிடமிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்ளுதல்

**44.** (1) இயைபான பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர், ஏதேனும் தொலைத் தொடர்பு, செய்மதி அல்லது எண்ணிமச் சேவை அல்லது தரவுச்சேவை வழங்குநரைப் பின்வருவன உட்பட்ட தகவல்களை வழங்கும்படி தேவைப்படுத்துவதற்கு நீதிவானொருவரிடமிருந்தான கட்டளையொன்றுக்காக விண்ணப்பிக்கலாம்:-

(அ) எவரேனுமாளுக்கு அத்தகைய சேவை வழங்குநரினால் வழங்கப்பட்ட அல்லது வழங்கப்பட்டுக்கொண்டிருக்கும் சேவைகள் தொடர்பிலான தகவல்கள்;

(ஆ) அத்தகைய சேவைகள் எந்த ஆளுக்குக் கிடைக் கக்கூடியனவாக்கப்பட்டுள்ளனவோ அந்த எவரேனுமாளினால் கிடைக்கப்பட்ட சேவைகள் தொடர்பிலான தகவல்கள்;

(இ) அத்தகைய சேவை வழங்குநரினால் தேக்கி வைக்கப்படக்கூடிய, பொதுப்பதிவேட்டில் இடப்படக்கூடிய அல்லது வேறுவகையாக வைத்திருக்கப்படக்கூடிய எவையேனும் தகவல்கள், தரவுகள், ஆவணம் அல்லது பதிவேடு; அல்லது

(ஈ) அத்தகைய சேவை வழங்குநரினால் வழங்கப்பட்ட சேவையினூடாக ஏதேனும் சாதனத்துக்கு அல்லது அதிலிருந்து தரவுகளை அல்லது தகவல்களைத் தரவேற்றல் அல்லது தரவிறக்குதல் தொடர்பிலான தகவல்கள்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய பொலிசு அலுவலர், இச்சட்டத்தின்கீழான பாரதூரமான குற்றச்செயலொன்று புரியப்படுகின்றமையில் எவரேனுமாளுக் கெதிராகச்

சந்தேகத்துக்கான நியாயமான ஏதுக்கள் இருந்தால் மட்டுமே இப்பிரிவின்கீழான கட்டளையொன்றுக்காக விண்ணப் பிக்கலாம்.

(2) நீதிவானொருவர், அத்தகைய பொலிசு அலுவலரினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தைக் கவனத்துட்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் அது புலனாய்வொன்றை நடாத்துவதற்காக நியாயமானதும் அவசியமானதுமாகத் தோன்றுமிடத்து, (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படியான கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும்.

(3) நீதிவானொருவர் விண்ணப்பம் தொடர்பில் இரகசியத் தன்மையைப் பேணுதல் வேண்டுமென்பதுடன் அது தொடர்பிலான வழங்குநடவடிக்கைகள், அரசியலமைப்பின் 106 ஆம் உறுப்புரைக்கமைய, அத்தகைய பொலிசு அலுவலரினால் கோரப்படின், அந்தரங்கமாக நடைபெறுதலும் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள பொலிசு அலுவலரொருவர், ஒரு நீதிவானின் கட்டளையின்றி, ஏதேனும் தொலைத்தொடர்பு, செய்மதி, எண்ணிமச் சேவை அல்லது தரவுச் சேவை வழங்குநரிடமிருந்து, சொந்தக்காரரின் அல்லது ஒப்பப்பணஞ்செலுத்துநரின் அடையாளம், அழைப்புக்கள், மற்றும் ஏதேனும் உபாயத்தின் அல்லது சாதனத்தின் கோபுர அமைவிடம் என்பன தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன், அத்தகைய பொலிசு அலுவலர் அல்லது அவரது சார்பில் செயலாற்றுகின்ற அலுவலர், உடனடியாக, அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள்பற்றி எழுத்தில் நீதிவானுக்குத் தெரிவித்தலும் வேண்டும்.

(5) சொந்தக்காரரின் அல்லது ஒப்பப்பணஞ் செலுத்துநரின் அடையாளம், அழைப்புக்கள், அல்லது ஏதேனும் உபாயத்தின் அல்லது சாதனத்தின் கோபுர அமைவிடம் என்பன தொடர்பான தகவல்களை ஒரு சேவை வழங்குநரிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு இச்சட்டத்தின்கீழ் அதிகாரமளிக்கப்பட்டிருந்து, சட்டமுறையான நியாயப்படுத்து கையின்றி ஒரு மூன்றாந்திறத்தவர் தொடர்பான அத்தகைய

தகவல்களை அறிந்துகொண்டு பெற்றுக்கொள்கின்ற எவரேனும் பொலிசு அலுவலர் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் ஒரு நீதிவான் முன்னரான சுருக்கவிளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் ஏற்புடையற்பாலதாக இருக்கக் கூடியவாறான அத்தகைய வேறு ஒழுக்காற்று நடவடிக்கைக்கும் ஆளாதலும் வேண்டும்.

தரவுகளையும் தகவல்களையும் வெளிக் கொணர்தல்

**45.** (1) இரண்டாம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட நோக்கங்களுக்காக, இச்சட்டத்தின்கீழான பாரதூரமான வொரு குற்றச்செயலினை புரிகையில் எவரேனுமாளுக் கெதிராகச் சந்தேகத்துக்கான நியாயமான ஏதுக்களைக் கொண்டுள்ள பொலிசு அத்தியட்சகரின் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள பொலிசு அலுவலரொருவர் பின்வருமாறு செய்வதற்கு அத்தகைய அலுவலருக்கு அதிகாரமளிக்கின்ற கட்டளையொன்றை நாடி நீதி வானொருவருக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்:-

(அ) எவையேனும் தரவுகளின் அல்லது தகவல்களின் அல்லது வேறு வஸ்துவின் ஏதேனும் தொடர்பாடல் அல்லது தேக்கச் சேவைகள் அல்லது சாதனம் தொடர்பிலான பூட்டிவைத்தல் அல்லது உள்மறைத்தல் சேவைகளை வழங்குகின்ற எவரேனுமாளை, அச்சேவையை அல்லது சாதனத்தை வெளிக்கொணரும்படியும் அல்லது உள்மறைப்பகற்றும்படியும், அத்தகைய பொலிசு அலுவலருக்கு அதன்கண் அடங்கியுள்ள தகவல்களை வழங்கும்படியும் பணிப்பதற்கும்;

(ஆ) வேறேதேனும் ஊடகத்தினூடாக ஏதேனும் அஞ்சற் செய்தியை அல்லது இலத்திரனியல் அஞ்சலை அல்லது ஏதேனும் தொலைபேசி, குரலொலி, இணையத்தள அல்லது காணொளி உரையாடலை இடைமறிப்பதற்கும், வாசிப்பதற்கும், செவிமடுப்பதற்கும் அல்லது பதிவதற்கும்; அல்லது

(இ) ஏதேனும் ஒப்புமை அல்லது எண்ணிமத் தரவுகளை அல்லது தகவற் பரிவர்த்தனையை அல்லது கைமாற்றல் முறைமையை அணுகுவதற்கும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நீதிவான் எந்த நோக்கங்களுக்காகக் கட்டளையொன்றை ஆக்கலாமோ அந்த நோக்கங்கள் பின்வருமாறாதல் வேண்டும்; அதாவது இச்சட்டத்தின்கீழான –

(அ) பாரதூரமான குற்றச்செயலைப் புரிந்துள்ள ஆளொருவரின் அடையாளத்தைத் தீர்மானிப்பதற்கும்;

(ஆ) பாரதூரமான குற்றச்செயலைப் புரிந்துள்ள ஆளொருவரின் அமைவிடத்தைத் தீர்மானிப்பதற்கும்;

(இ) பாரதூரமான குற்றச்செயல் பற்றிய புலனாய்வொன்று நடாத்தப்படுவதனை வசதிப்படுத்துவதற்கும்;

(ஈ) பாரதூரமான குற்றச்செயலைப் புரிந்துள்ள ஆளொருவருக்கெதிரான சான்றைச் சேகரிப்பதற்கும்;

(உ) பாரதூரமானவொரு குற்றச்செயலைப் புரிவதற்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள் எத்தனிக்கின்றனரா, உடந்தையளிக்கின்றனரா, சதிசெய்கின்றனரா, ஒழுங்கமைக்கின்றனரா, வசதிப்படுத்துகின்றனரா, ஆலோசனையளிக்கின்றனரா, செய்யப் பெறுகின்றனரா, பணிக்கின்றனரா, உதவுகின்றனரா, ஏவிவிடுகின்றனரா, ஊக்குவிக்கின்றனரா, தூண்டுகின்றனரா, கட்டளையிடுகின்றனரா, மதியுரை யளிக்கின்றனரா அல்லது ஆயத்தஞ் செய்கின்றனரா அல்லது ஆயத்தநிலையான ஏதேனும் செயலை செய்கின்றனரா என்பதைத் தீர்மானிப்பதற்கும்; அல்லது

(ஊ) பாரதூரமான குற்றச்செயல் புரியப்படுவதைத் தடுப்பதற்கான வழிமுறைகளை எடுப்பதற்கும்.

(3) நீதிவானொருவர், விண்ணப்பமானது நல்லெண்ணத்துடன் செய்யப்படுகின்றது என்றும் அத்தகைய கட்டளையை ஆக்குதல், புலனாய்வொன்றை நடாத்துவதற்காக நியாயமான

முறையில் அவசியமாகவுள்ளது என்றும் திருப்திப்படின், அவர் அத்தகைய கட்டளையை வழங்குதல் வேண்டும்.

பாகம் IV

**கூற்றுக்களின் ஏல்தகவு**

சான்றுக் கட்டளைச் சட்டத்தின் குறித்தசில ஏற்பாடுகள் ஏற்புடையற் பாலனவல்ல

**46.** வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப் பினும், சான்றுக் கட்டளைச்சட்டத்தின் 25 ஆம், 26 ஆம் மற்றும் 30 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள், இச்சட்டத்தின்கீழான பாரதூரமானவொரு குற்றச்செயல் தொடர்பிலான எவை யேனும் வழக்குநடவடிக்கைகளுக்கு ஏற்புடைமை எதனையும் கொண்டிருத்தலாகாது.

சந்தேக நபரினால் கையொப்ப மிடப்பட்ட கூற்று ஏல்தகவுடை யதாதல் வேண்டும்

**47.** (1) வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின்கீழான பாரதூரமான வொரு குற்றச்செயலுக்காகக் குற்றம்பகரப்பட்ட ஆளொருவரின் விளக்கத்தில், எந்நேரத்திலும் அத்தகைய ஆளினால் கையொப்பமிடப்பட்ட எழுத்திலான கூற்றொன்று, அத்தகைய கூற்று சான்றுக் கட்டளைச்சட்டத்தின் 24 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் இயைபற்றதாக இராதிருப்பின்,—

(அ) அத்தகைய கூற்று ஒரு குற்றவொப்புதலாக அமைகின்றதாயினுஞ்சரி அல்லது அமையாத தாயினுஞ்சரி;

(ஆ) அத்தகைய கூற்று அளிக்கப்பட்ட நேரத்தில் அத்தகைய ஆள் ஒரு பொலிசு அலுவலரின் கட்டுக்காப்பில் அல்லது சமுகத்தில் இருந் திருப்பினுஞ்சரி அல்லது இராதிருப்பினுஞ்சரி;

(இ) அத்தகைய கூற்று ஒரு புலனாய்வின்போது செய்யப்பட்டிருப்பினுஞ்சரி அல்லது செய்யப் படாதிருப்பினுஞ்சரி; அல்லது

(ஈ) அத்தகைய கூற்று முழுமையாக அல்லது பகுதியளவில் ஏதேனும் கேள்விக்கு மறு மொழியாக இருந்திருப்பினுஞ்சரி அல்லது இராதிருப்பினுஞ்சரி,

அத்தகைய ஆளுக்கெதிராக எண்பிக்கப்படலாம்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய கூற்று, உதவிப் பொலிசு அத்தியட்சகரின் பதவிவரிசைக்குக் குறைந்த பதவிவரிசையிலுள்ளவொரு பொலிசு அலுவலருக்கு அளிக்கப்பட்டிருப்பின், அத்தகைய ஆளுக்கெதிராகச் சான்றில் ஏல்தகவுடையதாதலாகாது.

(2) சான்றுக் கட்டளைச்சட்டத்தின் 24 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் கூற்று இயைபற்றதென்பதை எண்பிப்பதற்கான பொறுப்பு, அது இயைபற்றதென உறுதிகூறுகின்ற ஆளின் மேலாதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் சான்றில் ஏற்புடையதாகவுள்ள ஏதேனும் கூற்று, அக்கூற்றை அளிக்கின்ற ஆளுடன் இச்சட்டத்தின்கீழ் பாரதூரமான குற்றச்செயலைக் கூட்டாக புரிந்தமைக்காக குற்றம்பகரப்பட்ட வேறெவரேனுமாளுக் கெதிராக அத்தகைய கூற்று இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட கூற்றொன்று தவிர்ந்த சான்றின்மூலம் முக்கியமான விபரங்களில் ஒப்புறுதிப்படுத்தப்படின் அல்லது ஒப்புறுதிப்படுத்தப்பட்டால் மட்டுமே ஏல்தகவுடையதாகலாம்.

(4) இப்பிரிவின்கீழ் நடாத்தப்பட்ட ஒவ்வொரு நேர்காணலும் கட்புலரீதியிலும் செவிப்புலரீதியிலும் பதியப் படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய பதிதலானது புலனாய்வின் அலுவலகமுறையான பதிவேட்டின் பாகமாக வமைதலும் வேண்டும்.

(5) எந்தச் சந்தேகநபரின் கூற்று பதியப்படவுள்ளதோ அந்த எவரேனும் சந்தேகநபருக்கு, அத்தகைய நேர்காணலுக்கு முன்னர் அல்லது அக்கூற்றைப் பதியுமுன்னர் சட்ட மதியுரையைப் பெற்றுகொள்வதற்காகத் தான் விரும்பிய சட்டத்தரணியை அணுகுவதற்கான அவரது உரிமைபற்றித் தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

(6) தொழினுட்பச் செயலிழப்பு அல்லது வேறு விதிவிலக்கான சூழ்நிலைகள் காரணமாக (5) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி நேர்காணலொன்றைப் பதிதல் செயல்முறைக்குகந்ததல்லாததாக இருக்குமிடத்து, நேர் காணலை நடாத்துகின்ற பொலிசு அலுவலர், -

(அ) அத்தகைய தவறுதலுக்கான அல்லது இயலாமைக் கான காரணங்களை எழுத்தில் பதிதல் வேண்டும்;

(ஆ) செயல்முறைக்குகந்தவரை விரைவாக, பதிதலின்றி நேர்காணலைத் தொடர்வதற்காக நீதிவானொருவரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்; அத்துடன்

(இ) பெற்றுக்கொள்ளப்பட்ட கூற்று சந்தேகநபருக்கு விளங்கும் ஒருமொழியில் அவருக்கு வாசித்துக் காட்டப்பட்டு விளக்கப்படுவதனையும் அத்தகைய ஆள் அதற்கான அவரது ஒப்புக் கொள்ளலைக் கையொப்பமிடுவதனையும் அல்லது பொறிப்பதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(7) கட்புல - செவிப்புலப் பதிதலின் பிரதியொன்று தாமதமின்றி நீதிவான் முன்னிலைக்குக் கொணருதல் வேண்டுமென்பதுடன் நீதிநலன்கருதி நீதிமன்றம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய நிபந்தனை களுக்கமைய, சந்தேகநபருக்கு அல்லது அவரது சட்டத் தரணிக்குக் கிடைக்கக் கூடியதாக்கப்படுதலும் வேண்டும்.

(8) நீதிமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியாய மான நியாயப்படுத்துகையின்றி (4) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு முரணாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் கூற்று அதன் தன்னிச்சையான தன்மை மற்றும் ஏல்தகவு பற்றி அதிகரித்த நீதிமுறை நுனித்தாராய்வுக்கு அமைந்ததாதல் வேண்டும்.

நீதிவானுக்கும் அடையாள அணிவகுப்பிலும் அளிக்கப்பட்ட குறித்தசில கூற்றுக்கள் ஏல்தகவுடை யனவாதல்

**48.** சான்றுக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின்கீழ் பாரதூரமானவொரு குற்றச்செயலுக்காகக் குற்றம்பகரப்பட்ட ஆளொருவரின் விளக்கத்தில் பின்வரும் கூற்றுக்கள் ஏல்தகவுடையனவாதல் வேண்டும்:-

(அ) இச்சட்டத்தின்கீழான பாரதூரமானவொரு குற்றச்செயலொன்று புரியப்பட்டமை தொடர்பான ஏதேனும் நிகழ்வுபற்றி அறிந்துள்ளவரும் அலுவலரினால் நீதிவானொருவர் முன்னிலைக்குக் கொணரப்பட்டவருமான ஆளொருவரினால்,

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 277 ஆம் பிரிவிற்கிணங்கச் சத்தியத்தின்மீது அல்லது உறுதிக்கூற்றுமீது அத்தகைய நீதிவானுக்கு அளிக்கப்பட்டதும் அவரினால் பதியப்பட்டதுமான கூற்றொன்று; அல்லது

(ஆ) ஆளொருவர் விளக்கத்தில் சமுகமளித்திராமை அல்லது குறுக்குவிசாரணை செய்யப் படமுடியாமை அல்லது செய்யப்பட்டிராமை எவ்வாறிருப்பினும், நீதிவானொருவரினால் பதியப்பட்டதும் அல்லது அடையாள அணிவகுப் பொன்றில் பதியப்பட்டதும் இறந்துள்ள அல்லது கண்டுபிடிக்கப்படமுடியாத அத்தகைய ஆளினால் அளிக்கப்பட்டதுமான கூற்றொன்று.

குறித்தசில ஆவணங் களின் ஏல்தகவு

**49.** (1) இச்சட்டத்தின்கீழான பாரதூரமான குற்றச் செயலொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவரின் அல்லது அத்தகைய ஆளின் முகவரொருவரின் அல்லது பிரதிநிதியின் கட்டுக்காப்பு, கட்டுப்பாடு அல்லது உடைமையில் கண்டுப்பிடிக்கப்பட்ட ஏதேனும் ஆவணம், அத்தகைய ஆவணத்தின் ஆக்குநர் சாட்சியொருவராக அழைக்கப்படாமல் அத்தகைய ஆளுக்கெதிரான சான்றாக நீதிமன்றத்தின் முன்னிலைக்குக் கொணரப்படலாம் என்பதுடன் அந்த ஆவணத்தின் உள்ளீடுகள் அதன்கண் கூறப்பட்ட நிகழ்வுகள்பற்றி முதற்றோற்றச் சான்றாதலும் வேண்டும்.

(2) சான்றுக் கட்டளைச்சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஏதேனும் ஆதாரப்படுத்தும் சான்றுடன் சேர்த்து, புரியப்பட்டவொரு பாரதுாரமான குற்றச்செயல் தொடர்பான அல்லது பாரதுாரமான குற்றச்செயலொன்றில் சந்தேகநபர், சாட்சி அல்லது பலியாக்கப்பட்டவர் தொடர்பாக, ஒரு வெளிநாட்டுத் தகுதிவாய்ந்த அதிகாரியினால் வழங்கப்பட்டதும் அத்தகைய வெளிநாட்டு தகுதிவாய்ந்த அதிகாரியின் ஒரு சான்றிதழாகவுள்ளதெனச் சட்டத்துறைத் தலைமையதிபதியினால் சான்றுப்படுத்தப்பட்டதுமானவொரு சான்றிதழ், வெளிநாட்டுத் தகுதிவாய்ந்த அதிகாரி சாட்சியளிப்பதற்குத் தேவைப்படுத்தப்படாமல் அதன்கண் கூறப்பட்ட கருமங்கள் பற்றி முதற்றோற்றச் சான்றாதல் வேண்டும்.

சான்றுக் கட்டளைச் சட்டத்தின் 54 ஆம் பிரிவு ஏற்புடை யற்பாலதல்ல

**50.** சான்றுக் கட்டளைச்சட்டத்தின் 54 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், குற்றஞ்சாட்டப்பட்ட ஆள் முன்னையவொரு சந்தர்ப்பத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியற் குழுவின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர்களுடன் சேர்த்து, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பாரதூரமான குற்றச்செயல்களைப் புரிந்துள்ளார் என்ற சான்றுட்பட, 4 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட கருமங்களுள் எவற்றுக்கும் இயைபான சான்று, குற்றஞ்சாட்டப்பட்டவர் ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியற் குழுவின் உறுப்பினரொருவராவென்பதைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக இச்சட்டத்தின்கீழான எவையேனும் வழங்குநடவடிக்கைகளில் ஏல்தகவுடையதாதல் வேண்டும்.

பிரிவுகள் 46, 47, 48 மற்றும் 49 இன் ஏற்பாடுகள் ஏற்புடையன வாதலாகாது

**51.** இதன்கண் அல்லது வேறேதேனும் சட்டத்தில் முரணாக அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், 7 ஆம் அல்லது 8 ஆம் பிரிவின்கீழான தவறு தவிர இச்சட்டத்தின்கீழான பாரதூரமானவொரு குற்றச்செயலுக்கு ஆளொருவர் குற்றம்பகரப்படுமிடத்து, மற்றும் விளக்கத்தின்போது எந்நேரத்திலும் ஆனால் தீர்ப்புக்குமுன்னர், நீதிமன்றமானது, குற்றஞ்சாட்டப்பட்டவர் –

(அ) ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியற் குழுவின் உறுப்பினரொருவரல்ல; அத்துடன்

(ஆ) ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியற் குழுவின் பொதுவான குற்றவியல் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் செயலாற்றவில்லை,

எனத் திருப்திப்படுவதன்மேல், எவ்வாறாயினும், பந்திகள் (அ) மற்றும் (ஆ) வில் குறிப்பிடப்பட்ட இரு ஆக்கக்கூறுகளுக்குக் குற்றவாளியாக இராமல், குற்றப் பகர்வில் உள்ளடக்கப்பட்ட சார்த்தப்பட்ட பாரதூரமான குற்றச்செயலைக் குற்றஞ்சாட்டப்பட்டவர் புரிந்துள்ளாரென அபிப்பிராயப்படின், நீதிபதி குற்றப்பகர்வைத் திருத்தலாம் என்பதுடன் சொல்லப்பட்ட தவறு தொடர்பில் முதனிலை விசாரணையெதுவும் நடைபெற்றிருக்கவில்லை என்ற நிகழ்வு எவ்வாறிருப்பினும், அத்தகைய வேறு சட்டத்தின்கீழ் அத்தகைய தவறுக்காக அவருக்குக் குற்றத்தீர்ப்பளிக்கலாம்:

ஆயின், எவ்வாறாயினும், விளக்க நீதிபதி, அத்தகைய சூழ்நிலைகளில், குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றத்தன்மையை மதிப்பீடுசெய்வதில் பிரிவுகள் 46, 47, 48 மற்றும் 49 இன் ஏற்பாடுகளின்கீழ் நெறிப்படுத்தப்பட்ட சான்றைக் கவனத்துட்கொள்ளுதலாகாது:

ஆயின், மேலும், அத்தகைய தவறானது, 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணையிற் குறிப்பீடுசெய்யப்பட்ட தவறொன்றாகவிருப்பின், மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டவர் ஒரு யூரர்சபையினால் விளங்கப்படுவதற்கு விருப்புத் தெரிவிப்பின் விளக்கமானது புதியதாகக் கேட்கப்படுதல் வேண்டுமென்பதுடன் 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

பொய்ச் சான்றளித்தல்

**52.** (1) இச்சட்டத்தின்கீழான பாரதூரமானவொரு குற்றச்செயலுக்கான விளக்கமொன்றின்போது, எவரேனும் சாட்சி, ஏதேனும் முக்கியமான விடயத்தின்மீது ஒன்றில் வெளிப்படையாக அல்லது உட்கிடைமூலம் அவரினால் அளிக்கப்பட்டதும் ஒரு நீதிவானினால் பதியப்பட்டதுமான கூற்றொன்றுடன் அல்லது அவரினால் அளிக்கப்பட்டதும் ஏதேனும் அடையாள அணிவகுப்பில் பதியப்பட்டதுமான கூற்றொன்றுடன் முரண்படின், -

(அ) அத்தகைய கூற்றின்மேல் செயலாற்றுவதற்கும்; அத்துடன்

(ஆ) ஒரு நீதிமுறை வழக்குநடவடிக்கையில் வேண்டுமென்று பொய்ச்சான்று அளித்தமைக்காக, அத்தகைய சாட்சியை அத்தகைய விளக்கத்தின் முடிபில் குற்றஞ்சாட்டுவிப்பதும் அத்தகைய நீதிமன்றத்தின் பதிவாளரினால் தயாரிக்கப்பட்டு கையொப்பமிடப்படவேண்டிய குற்றப்பகர்வொன்றின்மீது விளக்கத்துக்குட் படுத்துவிப்பதும்

தலைமைதாங்கும் நீதிபதிக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழான ஏதேனும் விளக்கத்தில், சாட்சியானவர் முரண்பட்ட கூற்றை அளித்தாரென எண்பிப்பது போதுமானதாதல் வேண்டுமென்பதுடன் கூற்றுக்களுள் எது பொய்யானதென எண்பிப்பது அவசியமாதலுமாகாது.

நீதிவானொருவருக்கு அளிக்கப்பட்ட கூற்றொன்றின் ஏல்தகவுக்காகத் திருப்திப்படுத்தப்பட வேண்டிய முந்நிபந்தனைகள்

**53.** வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும்,இச்சட்டத்தின்கீழானபாரதூரமானவொரு குற்றச்செயலைப் புரிந்தமைக்காகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவரினால் நீதிவானொருவருக்கு அளிக்கப்பட்ட கூற்றொன்று –

(அ) அத்தகைய கூற்றைப் பதிந்த நீதிவான், அக்கூற்றைப் பதிவதற்கு நேர்முன்னரும் உடனடியாகப் பின்னரும், அக்கூற்றை அளித்த ஆள் அரசாங்கத் தடயவியல்சார் மருத்துவ விசேட வைத்தியரொருவரினால் பரிசோதனை செய்யப்படுவதனைச் செய்வித்திருந்தாலொழியவும்; அத்துடன்

(ஆ) அரசாங்கத் தடயவியல்சார் மருத்துவ விசேட வைத்தியரின் அறிக்கை கூற்றின் ஏல்தகவைச் சரிபார்ப்பதற்கு நடாத்தப்படக்கூடிய உண்மை விளம்பல் விசாரணையின்போது குற்றவழக்குத்தொடுக்கும் அதிகாரியினால் முன்னிலைக்குக் கொணரப்பட்டாலொழியவும்,

அத்தகைய ஆளுக்கெதிராகச் சான்றில் ஏல்தகவுடையதாதலாகாது.

## பாகம் V

## வெளிவிடுகையும் துப்புக்கொடுத்தலும்

தகவல்தருநரின் தகவல்களையும் அடையாளத்தையும் வெளிவிடாமை

**54.** (1) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின்கீழான பாரதூரமானவொரு குற்றச்செயலுக்காகத் தகவல்தருநரொருவரினால் வழங்கப்பட்ட தகவல்கள் எவையேனும் வழக்குநடவடிக்கை

களில் சான்றில் ஏற்றுக்கொள்ளப்படுதலாகாதென்பதுடன் எவையேனும் வழக்குநடவடிக்கைகளில் சாட்சியொருவர் பின்வருமாறு செய்வதற்குக் கடப்பாடுடையவராதலுமாகாது:-

(அ) இச்சட்டத்தின்கீழான பாரதூரமான குற்றச்செயலொன்று தொடர்பில் தகவல்களை அளித்துள்ள எவரேனும் தகவல்தருநரின் பெயரையும் முகவரியையும் வெளிவிடுவதற்கும்; அல்லது

(ஆ) ஏதேனும் கேள்விக்கான மறுமொழி, தகவல்தருநரின் பெயரை அல்லது முகவரியைக் கண்டறிவதற்கு இட்டுச்செல்லுமாயின் அல்லது இட்டுச்செல்லக்கூடியதாகவிருக்குமாயின், அக்கேள்விக்கான மறுமொழியைக் கூறுவதற்கும்.

(2) எவையேனும் வழக்குநடவடிக்கைகளில் சான்றிலுள்ள அல்லது சோதனைக்கு உட்படுத்தப்படக்கூடிய ஏதேனும் புத்தகம், ஆவணம் அல்லது பத்திரம், எவரேனும் தகவல்தருநர் பெயர்குறிப்பிடப்பட்டிருக்கும் அல்லது விவரிக்கப்பட்டிருக்கும் அல்லது தகவல்தருநரைக் கண்டறிவதற்கு இட்டுச்செல்லக்கூடிய ஏதேனும் பதிவீட்டைக் கொண்டிருப்பின், தகவல்தருநரைக் கண்டறிவதிலிருந்து பாதுகாப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அளவுக்கு நீதிமன்றம் அத்தகைய பதிவீடுகளைப் பார்வையிலிருந்து மறைத்துவைக்கப்படுவதனை அல்லது அழித்துவிடப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(3) (அ) இச்சட்டத்தின்கீழ் தண்டிக்கப்படற் பாலதான பாரதூரமான குற்றச்செயலொன்றுக்காக நீதிமன்றமொன்றின் முன்னரான எவையேனும் வழக்குநடவடிக்கைகளில், நீதிமன்றமானது, விடயம்பற்றி முழுமையாக விசாரணை செய்தபின்னர் தகவல்தருநரொருவர் பொய்யான தென அறிந்த அல்லது நம்பிய அல்லது உண்மையானதென நம்பாத முக்கியமான கூற்றொன்றை வேண்டுமென்று அறிந்தாரெனத் திருப்திப்படின்; அல்லது

(ஆ) வேறெவையேனும் வழக்குநடவடிக்கைகளில், தகவல்தருநரொருவரின் பெயரை வெளி

விடாமல் வழக்குநடவடிக்கைகளுக்கான திறத்தவர்களுக்கிடையே நீதியை முழுமையாக நிலைநாட்டமுடியாதென நீதிமன்றமானது அபிப்பிராயப்படின்,

நீதிமன்றமானது விசாரணைக்கு அனுமதியளிக்கலாமென்பதுடன் தகவல்தருநர் சம்பந்தமான முழுமையான வெளிவிடுகையைத் தேவைப்படுத்தலாம்.

தகவல் தருநரொருவரினால் தகவல்கள் வெளிவிடப்படுதல்

**55.** இச்சட்டத்தின்கீழான பாரதூரமானவொரு குற்றச் செயலொன்றுக்காகப் பொலிசு அலுவலரொருவருக்குத் தகவல்களை வழங்கும் ஆளொருவர், பின்வருவனவற்றை மீறுதலாகாது:-

(அ) நம்பிக்கைக்கான கடப்பாடு; அல்லது

(ஆ) தகவல்களை வழங்குவதன்மீது (ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட மட்டுப்பாடொன்று தவிர) எவ்வாறாயினும் விதிக்கப்பட்ட வேறேதேனும் மட்டுப்பாடு.

துப்புக் கொடுத்தல்

**56.** (1) (அ) பொலிசு அலுவலரொருவர் இச்சட்டத்தின்கீழ் அல்லது இதன் நோக்கங்களுக்காக நடாத்தப் பட்டுவருகின்ற அல்லது நடாத்தப்படும் தறுவாயிலுள்ள புலனாய்வொன்று சம்பந்தமாகச் செயலாற்றுகின்றார் அல்லது செயலாற்றுவதற்கு உத்தேசிக்கின்றாரென அறிந்துள்ளவரும் அல்லது சந்தேகிப்பதற்கு நியாயமான ஏதுக்களைக் கொண்டுள்ளவரும்; அத்துடன்

(ஆ) அப்புலனாய்வை அல்லது உத்தேசிக்கப்பட்ட புலனாய்வைப் பங்கப்படுத்தும் சாத்தியங் கொண்ட தகவல்களை அல்லது வேறேதேனும் கருமத்தை வேறெவரேனுமாளுக்கு வெளி விடுகின்றவருமான,

எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் மேல்நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது பத்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையி லொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது ஐந்து

இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை மற்றும் குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிலுள்ளதெதுவும், -

(அ) சட்டத்தரணியொருவரென்ற உயர் தொழிலர் தொழிலின்போதும் அதன் நோக்கத்துக்காகவும் ஒரு கட்சிக்காரருக்கு மதியுரையளித்தல் சமபந்தமாக அக்கட்சிக்காரருக்கு, அல்லது அக்கட்சிக்காரரின் பிரதிநிதி யொருவருக்கு; அல்லது

(ஆ) (i) அக்கட்சிக்காரருடன் தொடர்புபட்ட சட்ட வழக்குநடவடிக்கைகளை ஊகிப் பதில் அல்லது அது சம்பந்தமாகவும்; அத்துடன்

(ii) அவ்வழக்குநடவடிக்கைகளின் நோக்கத் துக்காகவும்,

எவரேனுமாளுக்கு,

எவையேனும் தகவல்களை அல்லது வேறு கருமத்தைச் சட்டத்தரணியொருவர் அல்லது அவரது ஊழியர் வெளி விடுதல் தவறொன்றை ஆக்குதலாகாது.

(3) ஏதேனும் சட்டவிரோதமான நோக்கத்தை முன்னெடுத் துச்செல்கின்ற நோக்குடன் வெளிவிடப்படும் எவையேனும் தகவல்கள் அல்லது வேறு கருமம் தொடர்பாக (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலாகாது.

(4) ஓராம் உட்பிரிவின்கீழான தவறொன்றுக்காக ஆளொருவருக்கெதிரான வழக்குநடவடிக்கைகளில், வெளி விடுகையானது (1) ஆம் உட்பிரிவில் விபரிக்கப்பட்ட வகையில் பங்கம் விளைவிக்கும் சாத்தியங்கொண்டதாக இருக்குமென அவ்வாள் அறிந்திருக்கவில்லை மற்றும் சந்தேகிப்பதற்கு நியாயமான ஏது எதனையும் கொண்டிருக்கவில்லையென்பதை எண்பிப்பது எதிர்வாதமொன்றாகும்.

(5) இச்சட்டத்தின் அல்லது வேறு தண்டனைச் சட்ட வாக்கத்தின் ஏதேனும் ஏற்பாட்டின் வலுவுறுத்துகை அல்லது உட்கருதப்பட்ட வலுவுறுத்துகை சம்பந்தமாகச் செயலாற்றுகின்றபோது, ஆளொருவரினால் செய்யப்பட்ட ஏது தொடர்பிலும் அவ்வாள் இப்பிரிவின்கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதலாகாது.

பாகம் VI

## பொது ஏற்பாடுகள்

இழப்பிக்கப் படுதல்

**57.** (1) இச்சட்டத்தின்கீழான பாரதூரமானவொரு குற்றச்செயலுக்கு எவரேனுமாளுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கும் நீதிமன்றம் இதனகத்துப்பின்னர் குறித்துரைக்கப்பட்ட தண்டங்களுள் எவற்றையும் விதிக்கலாமென்பதுடன், அது தகுதியானதெனக் கருதினால், பாரதூரமான குற்றச்செயல் எந்தப் பொருள்தொடர்பில் புரியப்பட்டதோ அந்தப் பொருட்கள் எல்லாம் அல்லது அவற்றுள் எவையும் மற்றும் அத்தகைய பொருட்களைக் கொண்டுசெல்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட எதுவும் அரசுக்கு இழப்பிக்கப்படுவதற்கு உட்படுகின்றனவெனக் கட்டளையிடலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட இழப்பிக்கப் படுவதற்கான கட்டளையொன்று பின்வருமாறு பயனுறுதல் வேண்டும்:-

(அ) இழப்பித்தற் கட்டளைக்கெதிராக மேன்முறை யீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடெதுவும் சமர்ப்பிக்கப்படாதவிடத்து, அத்தகைய இழப்பித்தற் கட்டளைக்கெதிராக மேன்முறை யீட்டு நீதிமன்றத்துக்கு எக்காலப்பகுதியினுள் மேன்முறையீடொன்று செய்யப்படலாமோ அக்காலப் பகுதி முடிவுறுவதன்மீது;

(ஆ) அத்தகைய இழப்பித்தற் கட்டளைக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீ டொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்து, அத்தகைய இழப்பித்தற் கட்டளையை உறுதிப்படுத்துகின்ற அல்லது நிலைநிறுத்துகின்ற மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கட்டளைக்கெதிராக உயர்

நீதிமன்றத்துக்கு மேன்முறையீடெதுவும் சமர்ப்பிக்கப்படாதவிடத்து, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அத்தகைய கட்டளைக்கெதிராக உயர்நீதிமன்றத்துக்கு எக்காலப்பகுதியினுள் மேன்முறையீடொன்று முன்வைக்கப்படலாமோ அக்காலப்பகுதி முடிவுறுவதன்மீது; அல்லது

(இ) அத்தகைய இழப்பித்தற் கட்டளைக் கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத் துக்கு மேன்முறையீடொன்று சமர்ப்பிக்கப் பட்டிருந்து, முதற்குறிப்பிடப்பட்ட மேன்முறை யீட்டின் மீது மேன்முறையீட்டு நீதி மன்றத்தின் தீர்மானத்துக்கெதிராக உயர் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடொன்று சமர்ப்பிக்கப் பட்டுள்ளவிடத்து, இழப்பித்தற் கட்டளையை உறுதிப்படுத்தி அல்லது நிலைநிறுத்தி உயர்நீதிமன்றத்தினாலான தீர்மானத்தின்மேல்.

(3) குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் பாகம் IX இன் அத்தியாயம் XXXVIII இன் ஏற்பாடுகள், (1) ஆம் உட்பிரிவின்கீழ் அரசுக்கு இழப்பிக் கப்பட்ட ஏதேனும் பொருளின் கையுதிர்ப்பு தொடர்பாக ஏற்புடையனவாதல் வேண்டும்.

தண்டனை யளித்தல் தொடர்பான விசேட ஏற்பாடுகள்

**58.** இச்சட்டத்தில் அல்லது வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும் –

(அ) இச்சட்டத்தின்கீழான பாரதூரமானவொரு குற்றச்செயலுக்கு ஆளொருவருக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்படுமிடத்து, நீதிமன்றம், அதன் சாதாரண நியாயாதிக்கம் எவ்வாறிருப்பினும், அத்தகைய ஆளுக்கு இச்சட்டத்தின்கீழான பார தூரமானவொரு குற்றச்செயலுக்கு முன்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின், அது விதிக்கக்கூடிய வேறேதேனும்தண்டத்துடன்சேர்த்துமேலதிகமாக, அத்தகைய தவறுக்காக விதித்துரைக்கப்பட்ட அதிகபட்ச மறியற்றண்டனைக் காலப்பகுதியின் மூன்றிலொன்றுக்குக் குறையாதவொரு காலப் பகுதிக்கான மறியற்றண்டனைத் தீர்ப்பொன்றை அத்தகைய ஆளுக்கு விதித்தல் வேண்டும்; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழான பாரதூரமானவொரு குற்றச்செயலுக்காக நீதிமன்றமொன்றினால்

ஆளொருவருக்குத் தண்டனையளிக்கப்பட்டுள்ள விடத்து, அவர் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக் கமையவும் வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஏதேனும் முன்கூட்டிய விடுவிப்புத் திட்டத்தின் கீழ் விடுவிக்கப் படுவதற்காகக் கவனத்துட் கொள்ளப்படுவதற்குத் தகவுடையவராதலாகாது.

வழக்குக்கான பாதுகாப்பு

**59.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளைப் பின்பற்றி அல்லது பின்பற்றுவதாகக் கருதி நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட அல்லது செய்யப்படுவதாக அல்லது செய்யாதுவிடப்படுவதாகக் கருதப்பட்ட ஏதேனும் சட்டமுறையான செயல் அல்லது காரியத்துக்காக ஏதேனும் அலுவலர் அல்லது ஆளுக்கெதிராகக் குடியியல் அல்லது குற்றவியல் துடர்ச்சி, குற்றவழக்கு அல்லது வேறு வழக்குநடவடிக்கை எதுவும் அமைதலாகாது.

1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீளவொப் படைத்தல் சட்டத்துக்கான திருத்தம்

**60.** ஆயிரத்துத்தொள்ளாயிரத்து எழுபத்தேழாமாண்டின் 8 ஆம் இலக்க, மீளவொப்படைத்தல் சட்டம், அச்சட்டத் துக்கான அட்டவணையின் பாகம் ஆ வுக்கு நேர்முன்னர் பின்வரும் விடயத்தை உட்புகுத்துவதன்மூலம் இத்தாற்றிருத் தப்படுகின்றது:-

“( ) ................ ஆம் ஆண்டின் ............. ஆம் இலக்க, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களைத் தடுத்தல் சட்டத்தின் கருத்துக்குட்பட்ட தவறொன்று.”.

சட்டத்திலுள்ள பாரதூரமான குற்றச் செயலுக் காக ஏற்பாடு செய்வனவாகக் கருதப்பட்ட அரசுகளுடன் ஏலவேயுள்ள மீளவொப் படைத்தல் ஒழுங்கேற் பாடுகள்

**61.** இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியன்று ஏதேனும் அரசுடன் இலங்கை அரசாங்கத்தினால் செய்யப்பட்டவொரு மீளவொப்படைத்தல் ஒழுங்கேற்பாடு வலுவிலுள்ளவிடத்து, அத்தகைய ஒழுங்கேற்பாடு, 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீளவொப்படைத்தல் சட்டத்தின் நோக்கங்களுக்காக இச்சட்டத்திற் குறித்துரைக்கப்பட்ட பாரதூரமான குற்றச்செயல்கள் தொடர்பில் மீளவொப்படைப்பதற்கான ஏற்பாட்டை உள்ளடக்குவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*சட்டத்திலுள்ள பாரதூரமான குற்றச்செயல்கள் தொடர்பில், இலங்கைக்கும் குறித்தசில அரசுகளுக்கு மிடையேயான மீளவொப் படைத்தல் ஒழுங்கேற்பா டொன்றாக அமைச்சர் சமவாயத்தைக் கருதலாம்*

**62.** இலங்கை அரசாங்கத்தினால் ஏதேனும் அரசுடன் செய்யப்பட்ட மீளவொப்படைத்தல் ஒழுங்கேற்பாடொன்று இல்லாதவிடத்து, அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீளவொப்படைத்தல் சட்டத்தின் நோக்கங்களுக்காக, இச்சட்டத்திற் குறித்துரைக்கப்பட்ட பாரதூரமான குற்றச்செயல்கள் தொடர்பில் மீளவொப்படைத்தலுக்காக ஏற்பாடுசெய்கின்ற, அவ்வரசுடனான இலங்கையின் மீளவொப்படைத்தல் ஒழுங்கேற்பாடொன்றாகச் சமவாயத்தைக் கருதலாம்.

*எந்த ஆட்களின் மீள்வொப் படைத்தலுக் காகக் கோரிக்கை யொன்று விடுக் கப்படுகின்தோ அந்த ஆட்களுக் கெதிராக எடுக்கப்பட்ட வழிமுறைகள் பற்றிக் கோரிக்கை விடுக்கின்ற அரசுக்கு அறிவிப்பதற்கு அமைச்சருக் குள்ள கடமை*

**63.** இச்சட்டத்தின்கீழான பாரதூரமான குற்றச் செயலொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட அல்லது குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனுமாளின் மீளவொப் படைத்தலுக்கான உடன்படிக்கையொன்று இலங்கை அரசாங்கத்தினால் எந்த அரசுடன் செய்து கொள்ளப்பட்டுள்ளதோ அந்த அரசின் அரசாங்கத்தினால் அல்லது அதன்சார்பில் இலங்கை அரசாங்கத்துக்குக் கோரிக்கையொன்று விடுக்கப் படுமிடத்து, அமைச்சர், இலங்கை அரசாங்கத்தின் சார்பில், அப் பாரதூரமான குற்றச்செயலுக்காக அவ்வாளின் குற்ற வழக்குத்தொடுப்புக்காக அல்லது மீளவொப் படைத்தலுக்காக இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள அல்லது எடுப்பதற்கு உத்தேசிக்கின்ற வழிமுறைகள்பற்றிக் கோரிக்கைவிடுக்கின்ற அரசின் அரசாங்கத்துக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

*அரசொன்றுக்கு உதவிபுரிதல்*

**64.** (1) இச்சட்டத்தின்கீழான பாரதூரமான குற்றச் செயலொன்றுக்கான புலனாய்வுக்கும் குற்ற வழக்குத்தொடுப்புக்கும் அவசியமானவிடத்தெல்லாம், 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் ஏற்பாடுகள், இலங்கை அரசாங்கத்துக்கும் ஒன்றில், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழான கட்டளைமூலம் அமைச்சரினாற் குறித்துரைக்கப்பட்ட பொதுநலவாய நாடுகளாகவுள்ள அல்லது மேற்கூறப்பட்ட சட்டத்தின் நியதிகளின்படி இலங்கை அரசாங்கம் அவற்றுடன் உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்ட பொதுநலவாய நாடுகள்சாரா வேறு அரசுகளாகவுள்ள நாடுகளுக்குமிடையேயானவாறு உதவி வழங்குதல் தொடர்பில் ஏற்புடையற்பாலனவாதல் வேண்டும்.

(2) ஓர் அரசுக்கு உதவி வழங்குதலானது, தகுதி யானவையென அமைச்சர் கருதக்கூடியவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கமைய செய்யப்படலாம்.

தகவல்களை அளிப்பதற்கான சட்டக் கடப்பாடு

**65. (1)** (அ) வேறெவரேனுமாள் –

(i) இச்சட்டத்தின்கீழான பாரதூரமான வொரு குற்றச்செயலைப் புரிகின்றார்,புரிய எத்தனிக்கின்றார், உடந்தை யளிக்கின்றார், சதிசெய்கின்றார், ஒழுங்கமைக்கின்றார், வசதிப் படுத்துகின்றார், ஆலோசனை யளிக்கின்றார், செய்யப்பெறுகின்றார், பணிக்கின்றார், உதவுகின்றார், ஏவிவிடுகின்றார், ஊக்குவிக்கின்றார், தூண்டுகின்றார், கட்டளையிடுகின்றார், அல்லது மதியுரையளிக்கின்றார் அல்லது ஆயத்தஞ் செய்கின்றார் அல்லது அதற்கு ஆயத்தநிலையான ஏதேனும் செயலை செய்கின்றார்; அல்லது

(ii) இச்சட்டத்தின்கீழான பாரதூரமான வொரு குற்றச்செயலைப் புரிந்துள்ளார்,

எனவறிந்துகொண்டு அல்லது நம்புவதற்குக் காரணங்களைக் கொண்டிருந்து அத்தகைய தகவல்களை வழங்குவதற்குத் தவறுகின்ற; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழான பாரதூரமான குற்றச்செயலொன்றைப் புரிந்துள்ளாரென அவர் அறிந்துள்ள எவரேனுமாள் எங்குள்ளாரென்பது தொடர்பான எவையேனும் தகவல்களைத் தனதுடைமையில் கொண்டிருந்து, அத்தகைய தகவல்களை வழங்குவதற்குத் தவறுகின்ற அல்லது பிழைவழியுய்க்கும் தகவல்களை வழங்குகின்ற,

எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் மேல் நீதிமன்றத்தினால் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஏழாண்டுகளை விஞ்சாத வொரு காலத்துக்கு இருவகையிலொருவகையான மறியற் றண்டனைக்கு அல்லது இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத

குற்றப்பணத்துக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால், உடன் படிக்கையினால், ஒப்பந்தத்தினால், சத்தியத்தினால் அல்லது வேறுவகையாக விதிக்கப்பட்ட ஏதேனும் இரகசியத்தன்மைக் கடப்பாடு அல்லது வேறு மட்டுப்பாடு எவ்வாறிருப்பினும், ஆளொருவர் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கி யொழுகுதல் வேண்டும்.

பொருள் கோடல்

**66.** இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலொழிய –

"ஆயுதந்தாங்கிய படைகள்" என்பது, பின்வருவோரை உள்ளடக்கும்:-

(அ) (357 ஆம் அத்தியாயமான) தரைப்படைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கத் திரட்டப்பட்டு பேணப்பட்ட இலங்கைத் தரைப்படையின் உறுப்பினர்கள்;

(ஆ) (358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கத் திரட்டப்பட்டு பேணப்பட்ட இலங்கை கடற்படையின் உறுப்பினர்கள்; அத்துடன்

(இ) (359 ஆம் அத்தியாயமான) வான்படைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கத் திரட்டப்பட்டு பேணப்பட்ட இலங்கைத் வான்படையின் உறுப்பினர்கள்;

"குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டம்" என்பது, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டம் என்று பொருளாகும்;

"கட்டுப்படுத்தப்பட்ட ஒப்படைப்பு" என்பது, பின்வருவன உட்பட ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படாமல், இச்சட்டத்தின் குறிக் கோள்களை எய்துகின்ற நோக்கத்துக்காக ஒரு பொலிசு அலுவலரின் நேரடியான அல்லது நேரடியானதல்லாத மேற்பார்வையை அனுமதிக்கின்ற புலனாய்வுசார் தொழினுட்பம் என்று பொருளாகும்:-

(அ) இச்சட்டத்தின்கீழ் புரியப்பட்டுள்ளதெனச் சந்தேகிக்கப்பட்ட பாரதூரமான குற்றச் செயலையும் பாரதூரமான குற்றச்செயல்கள் புரியப்படுவதனையும் மேலும் புலனாய்வு செய்வதனை இயலச்செய்தல்;

(ஆ) மேலே கூறப்பட்ட பாரதூரமான குற்றச் செயல்களின் புரிகையில் சம்பந்தப்பட்ட எல்லா ஆட்களையும் அடையாளங்காணல்;

(இ) அத்தகைய பாரதூரமான குற்றச்செயல்கள் தொடர்பான சான்றைச் சேகரித்தல்; அல்லது

(ஈ) அத்தகைய பாரதூரமான குற்றச் செயல்களில் சம்பந்தப்பட்டுள்ள ஆட் களைக் கண்டறிதலும் அடையாளங் காணலும்;

"சான்றுக் கட்டளைச்சட்டம்" என்பது, (14 ஆம் அத்தியாயமான) சான்றுக் கட்டளைச்சட்டம் என்று பொருளாகும்;

"மேல் நீதிமன்றம்" என்பது, அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல்நீதிமன்றம் என்று பொருளாகும்;

"தகவற் புத்தகம்" என்பது, கூற்றுக்களைப் பதியும் நோக்கத்துக்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினாலும் ஏதேனும் புலனாய்வுப் பணியகத்தினாலும் பேணப்பட்ட ஒரு குற்றச்செயல் இதழ்க்கட்டை அல்லது கோப்பை உள்ளடக்கும்;

"நிதிசார் அல்லது வேறு பொருள்வகையான நன்மை" என்பது, சேவைகளுட்பட, ஏதேனும் வகையினதான நிதிசார் அல்லது நிதிசாரா ஊக்குவிப்பு, கொடுப்பனவு, இலஞ்சம், வெகுமதி, அல்லது வேறு அனுகூலத்தை உள்ளடக்கும்;

"அமைச்சர்" என்பது, அரசியலமைப்பின் 44 ஆம் அல்லது 45 ஆம் உறுப்புரையின்கீழ் இச்சட்டம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சர் என்று பொருளாகும்;

“ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியற் குழு” என்பது, நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல், ஒரு நிதிசார் அல்லது வேறு பொருள்வகையான நன்மையைப் பெற்றுக்கொள்வதற்கென, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பாரதூரமான குற்றச்செயல்களைப் புரிகின்ற இலட்சியத்துடன், மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்களைக் கொண்டதும், ஒரு காலப்பகுதிக்குமேலாக உள்ளதும் ஒன்றாகச் செயலாற்றுகின்றதுமான கட்டமைக்கப்பட்டவொரு குழு என்று பொருளாகும்;

“கட்டமைக்கப்பட்ட குழு” என்பது, பாரதூரமான குற்றச் செயலொன்றை உடனடியாகப் புரிவதற்காக ஒழுங்கற்றமுறையில் அமைக் கப்படாததும், அதன் உறுப்பினர்களுக்கான விதிமுறைப்பட்டமுறையில் வரையறுத்துக் கூறப்பட்ட வகிபங்குகளை அதன் உறுப் பாண்மையிலான தொடர்ச்சியை அல்லது அபி விருத்தி செய்யப்பட்டவொரு கட்டமைப்பைக் கொண்டிருக்கவேண்டியதல்லாததுமான ஒரு குழு என்று பொருளாகும்;

“பொலிசு அலுவலர்” என்பது, (53 ஆம் அத்தியாயமான) பொலிசுக் கட்டளைச்சட்டத்திலுள்ளவாறான அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

“மறைமுகமான தொழிற்பாடு” என்பது, பின்வருவனவுட்பட ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படாமல், இச்சட்டத்தின் குறிக்கோள்களைஎய்துகின்றநோக்கங்களுக்காக, பாரதூரமான குற்றச்செயலொன்றை அமைத்து ருவாக்குகின்ற நடவடிக்கைகளைச் சில நேரங்களில் அமையக்கூடிய நடத்தையைக் கொண்ட பொலிசு அலுவலரொருவர் சம்பந் தப்பட்டுள்ள புலனாய்வொன்றினுள்ளான ஒரு நடைமுறை என்று பொருளாகும்:-

(அ) சந்தேகநபர்களைக் கண்டறிதல், கண்டு பிடித்தல், அடையாளங்காணல் மற்றும் தேடுதல்;

(ஆ) பாரதூரமான குற்றச்செயல்களைப் புரிகின்ற ஆட்களை அடையாளங்காணல்; அத்துடன்

(இ) அத்தகைய ஆட்களும் பாரதூரமான குற்றச் செயல்களை புரிதலும் தொடர்பான புலனாய்வுகளும் சான்று சேகரித்தலும்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**67.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## முதலாம் அட்டவணை

[பிரிவு 3]

| | *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|---|
| இல. | சட்டவாக்கம் | பிரிவு | தவறின் தன்மை |
| 1. | (188 ஆம் அத்தியாயமான) தொல் பொருள் கட்டளைச் சட்டம் | 15 | தொல் பொருட்களின் கண்டு பிடிப்பு தொடர் பான தவறுகள் |
| 2. | 2023 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, குற்றச் செயல்களுக்கு பலியாக்கப் பட்டோருக்கும் சாட்சி களுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டம் | 14 | குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப் பட்ட ஒருவரை அல்லது சாட்சி ஒருவரை மிரட்டுதல் |
| 3. | 2007 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, இரசாயன ஆயுதங்கள் சமவாயச் சட்டம் | 20 | நச்சுத் தன்மை இரசாயனப் பொருளை அல்லது முற்பொருளை அபிவிருத்தி செய்தல், தயாரித்தல், கொள்ளுதல் முதலியவற்றுக்கான தடைகள் |
| 4. | 2007 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, இரசாயன ஆயுதங்கள் சமவாயச் சட்டம் | 21 | ஏற்றுமதி அல்லது இறக்குமதி (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்திற் கிணங்கச் செய்யப்படுதல் |
| 5. | 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான் செலவுச் சட்டம் | 82 | அபாயகரமான பறத்தல் தொழிற் பாடுகள் |
| 6. | 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான் செலவுச் சட்டம் | 103 | அச்சட்ட ஏற்பாடுகள், ஒழுங்குவிதிகள் முதலியன வற்றை மீறுதல் |
| 7. | 2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, கணினிவழிக் குற்றச் சட்டம் | 7 | சட்ட விரோதமாகப் பெறப்பட்ட தரவு முதலிய வற்றைக் கையாளுதல் தவறொன்றாதல் |
| 8. | 2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, கணினிவழிக் குற்றச் சட்டம் | 8 | சட்ட விரோதமாகத் தரவைக் குறுக்கீடு செய்தல் தவறொன்றாதல் |
| 9. | 2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, கணினிவழிக் குற்றச் சட்டம் | 9 | சட்ட முரணான உபாயங்களைப் பாவித்தல் தவறொன்றாதல் |

| | *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|---|
| இல. | சட்டவாக்கம் | பிரிவு | தவறின் தன்மை |
| 10. | 2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, கணினிவழிக் குற்றச் சட்டம் | 10 | சேவையொன்றுக்கான அணுக்கத்தை இயலச் செய்யும் தகவலின் அதிகார மற்ற வெளியிடல் தவறொன்றாதல் |
| 11. | 2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, கணினிவழிக் குற்றச் சட்டம் | 11 | தவறுகளைப் புரிவதற்கான எத்தனிப்புகள் |
| 12. | 2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, கணினிவழிக் குற்றச் சட்டம் | 12 | தவறொன்றுக்கு உடந்தையாயிருத்தல் |
| 13. | 2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, கணினிவழிக் குற்றச் சட்டம் | 13 | தவறொன்றைப் புரிவதற்கான சூழ்ச்சி |
| 14. | (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச்சட்டம் | 146 | கட்டளைச் சட்டத்தின் ஏதேனும் பிரிவின்கீழ் இழப்பித்தல் அல்லது தண்டத்திற்கு பொறுப்பான ஆள் தவறொன்றுக்கு குற்றவாளியாக விருத்தல் |
| 15. | (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டம் | 46 | சட்ட முரணான இறக்கு மதிக்கான தண்டங்கள் |
| 16. | (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டம் | 47 | சட்ட முரணான உடைமை அல்லது இடம் பெயர்த்தலுக்கானது |
| 17. | (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டம் | 48 | உரிமம் பெற்றவரின் தவறான நடத்தைக்கானது |
| 18. | (469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் | 37 | உரிமங்களின்றி பாலூட்டிகள், பறவைகள், ஊர்வன மீன்கள் மற்றும் முதுகெலும்பற்றவையின் இறக்குமதிக்கான தடை |
| 19. | (469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் | 39 | பாலூட்டிகள், பறவைகள், ஊர்வன, இருவாழ்விகள், மீன்கள் மற்றும் முதுகெலும்பற்றவையின் சட்ட முரணான இறக்குமதி அல்லது விடுவிப்புக்கான தண்டங்கள் |

| | *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|---|
| இல. | சட்டவாக்கம் | பிரிவு | தவறின் தன்மை |
| 20. | 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டம் | 27 | நிகழ்வைப் பற்றி இயைபான அதிகாரிக்கு முதலில் அறிவிக் காமல் தம்மகத்தே அல்லது தமது பொதியில் காசாக அல்லது கொ ண் டு வ ரு ப வ ரா ல் கைமாற் றத்தகு சாதனங்களாக விதித் துரைக்கப்பட்டதைவிடக் கூடுதலான பணத் தொகை யுடன் இலங்கையை விட்டு செல்லுதல் அல்லது இலங்கையை வந்தடைதல் |
| 21. | 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டம் | 28 | பொய்யான தகவல் கொடுப்பது தவறொன் றாதல் |
| 22. | (451 ஆம் அத்தியாயமான) காடு பேணற் கட்டளைச் சட்டம் | 20 | ஒதுக்குக்காடு, வன ஒதுக்கம், கிராமக் காடு ஒன்று தவிர்ந்த ஏதேனும் காட்டில் தடுக்கப்பட்ட செயல்கள் |
| 23. | (451 ஆம் அத்தியாயமான) காடு பேணற் கட்டளைச் சட்டம் | 25 | தண்டங்கள் (அச் சட்டத்தின் ஏதேனும் செயற்பாடுகளை மீறுதல்) |
| 24. | 2025 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, பணச் சூதாட்டத்தை ஒழுங்கு படுத்தும் அதிகாரசபைச் சட்டம் | 42 | உரிமமின்றி பணச் சூதாட்டத்தை நடாத்துதல் |
| 25. | 2025 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, பணச் சூதாட்டத்தை ஒழுங்கு படுத்தும் அதிகாரசபைச் சட்டம் | 43 | பொய்யான பிழை வழியுய்க்கின்ற அல்லது செம்மையற்ற தகவல் களை வழங்குதல் |
| 26. | 2025 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, பணச் சூதாட்டத்தை ஒழுங்கு படுத்தும் அதிகாரசபைச் சட்டம் | 44 | சட்டமுறையற்ற பணச் சூதாட்டத்தை விளம்பரப் படுத்துதல் |

| | *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|---|
| இல. | சட்டவாக்கம் | பிரிவு | தவறின் தன்மை |
| 27. | 2025 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, பணச் சூதாட்டத்தை ஒழுங்கு படுத்தும் அதிகாரசபைச் சட்டம் | 45 | அங்கீகரிக்கப்பட்ட பணச் சூதாட்ட வளவுகளுக்கு வெளியே பணச் சூதாட்டத் தொழிற் பாடுகள் முதலியன |
| 28. | 2025 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, பணச் சூதாட்டத்தை ஒழுங்கு படுத்தும் அதிகாரசபைச் சட்டம் | 46 | சட்டமுறையற்ற பணச் சூதாட்டத் துக்காக ஒரு சொந்தக் காரரினால் அல்லது குடியிருப் பாளரினால் வளவு கள் பயன்படுத்தப் படுதல் அல்லது அதன் பயன்பாட்டை அனுமதித்தல் |
| 29. | 2025 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, பணச் சூதாட்டத்தை ஒழுங்கு படுத்தும் அதிகாரசபைச் சட்டம் | 47 | சட்ட முறையற்ற சூதாட்டத்தை ஒழுங்கு படுத்துதல் என்ற தவறு |
| 30. | 2025 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, பணச் சூதாட்டத்தை ஒழுங்கு படுத்தும் அதிகாரசபைச் சட்டம் | 48 | சட்ட முறையற்ற சூதாட்டத்துக்கு நிதி யளித்தல் என்ற தவறு |
| 31. | 2025 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, பணச் சூதாட்டத்தை ஒழுங்கு படுத்தும் அதிகாரசபைச் சட்டம் | 50 | தடை செய்யப்பட்ட அல்லது அங்கீ கரிக்கப்படாத பணச் சூதாட்டப் பொறியைப் பயன்படுத்துதல் |
| 32. | 2025 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, பணச் சூதாட்டத்தை ஒழுங்கு படுத்தும் அதிகாரசபைச் சட்டம் | 51 | வயது குறைந்த தனியாட் களுடனான பணச் சூதாட்டம் |
| 33. | 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டம் | 178 | பதிப்புரிமையின் மீறுகை |

| | *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|---|
| இல. | சட்டவாக்கம் | பிரிவு | தவறின் தன்மை |
| 34. | 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டம் | 179 | கைத்தொழில் வடி வமைப்பு மீறுகை |
| 35. | 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டம் | 180 | கைத்தொழில் வடிவமைப் புகள் தொடர் பில் பொய்யான கூற்று |
| 36. | 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டம் | 181 | ஆக்கவுரிமை களின் மீறுகை |
| 37. | 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டம் | 182 | ஆக்கவுரிமைகள் தொடர் பிலான பொய்யான கூற்றுக்கள் |
| 38. | 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டம் | 183 | ஆக்க வுரிமைகள் தொடர்பிலான தகவல் சட்ட விரோதமாக வெளியிடல் |
| 39. | 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டம் | 184 | குறிகளின் மீறுகை |
| 40. | 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டம் | 185 | குறிகள் தொடர்பாக பொய்யான கூற்றுக்கள் |
| 41. | 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டம் | 186 | குறிகள் வியாபார விவரணங்கள் பற்றிய வேறு தவறுகள் |
| 42. | 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டம் | 63(1) | உரிமமின்றி அகழ்ந் தெடுத்தல், சுரங்கம் தோண்டுதல் உடைமை கொள்ளல் முதலியன |
| 43. | 2006 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, கொடுப்பனவு உபாயங்களின் மோசடிகள் சட்டம் | 3(1) (ஊ), (ஔ), (க), (ங), (ச) மற்றும் (ஞ) | கொடுப்பனவு உபாயங் களின் மோசடியாக அமைகின்ற செயல்கள் |

| | *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|---|
| இல. | சட்டவாக்கம் | பிரிவு | தவறின் தன்மை |
| 44. | (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக் கோவை | 101 தொடக்கம் 113ஆ வரை | குறித்த தவறு நான்கு ஆண்டுகளை விட குறைந்த மறியற்றண்டனையை கொண்டுள்ள விடத்து, இந்த அட்ட வணையில் தரப்பட்டுள்ள ஏதேனும் தவறை புரிய உடந்தை யாகவிருத்தல், சதிசெய்தல் முதலியன |
| 45. | (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக் கோவை | 128 | மாலுமி, தரைப்படை வீரர் அல்லது வான்படை வீரர் ஒருவர் கலகஞ் செய்ய உடந்தையளித்தல் அல்லது அவரைக் கடமை யிலிருந்து மருட்டிக் கெடுத்தல் |
| 46. | (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக் கோவை | 132 | மாலுமி, தரைப்படை வீரர் அல்லது வான்படை வீரர் படைவிட்டேக உடந்தை யளித்தல் |
| 47. | (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக் கோவை | 133 | படை விட்டேகியவருக்கு புகல் அளித்தல் |
| 48. | (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக் கோவை | 137 | மாலுமியின், தரைப்படை வீரரின் அல்லது வான்படை வீரரின் உடையைத் தரித்தல் |
| 49. | (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக் கோவை | 183 | பகிரங்க சேவையாளரை அவரது பகிரங்க பணியினை நிறை வேற்றுவதில் முட்டுக் கட்டையிடுதல் |
| 50. | (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக் கோவை | 337 | இரகசியமாக முறை கேடாக அடைத்து வைத்தல் |

| | *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|---|
| இல. | சட்டவாக்கம் | பிரிவு | தவறின் தன்மை |
| 51. | (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக் கோவை | 338 | ஆதனத்தை அச்சுறுத்திப் பெறும் அல்லது சட்ட விரோதமான செயலைக் கட்டாயப்படுத்தும் நோக் கத்திற்காக முறைகேடாக அடைத்து வைத்தல் |
| 52. | (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக் கோவை | 344 | பகிரங்க சேவையாள ரொருவரை அவரது கடமையை நிறைவேற்று வதிலிருந்து விலக் குவதற்கென குற்ற முறையான வலோத் காரத்தை பிரயோகித்தல் |
| 53. | (218 ஆம் அத்தியாயமான) நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச் சட்டம் | 54அ மற்றும் 54ஆ | அபாயகரமான அவுடதங் களின் உற்பத்தி, வியாபாரம், இறக்குமதி அல்லது ஏற்றுமதி மற்றும் உடைமை மற்றும் அத்தகைய தவறுகைக்கு உடந்தையாயிருத்தல், (அக்கட்டளைச் சட்டத்தின் அட்டவணையின் பாகம் III இற்கிணங்க) தொகை ஒரு கிலோகிராமுக்கு குறைவாக இருப்பின் கஞ்சா தொடர்பில். |

## இரண்டாம் அட்டவணை

[பிரிவு 19(1)]

### கைதுசெய்தலும் கட்டுக்காப்பும்பற்றிய அறிவிப்பு

1. கைதுசெய்யப்பட்ட ஆளின் பெயர்:-
2. கைதுசெய்யப்பட்ட தேதியும், நேரமும், இடமும்:-
3. கைதுசெய்தமைக்கான காரணங்கள்:-
4. கைதுசெய்யப்பட்ட ஆளின் உத்தேசிக்கப்பட்ட கட்டுக்காப்புக்கான இடம்:-
5. கைதுசெய்யும் அலுவலரின் பெயர், அடையாளங்காண் இலக்கம் மற்றும் பதவிவரிசை:-
6. கைதுசெய்யப்பட்ட ஆளின் கிட்டிய உறவினர் அவருக்கான நியாயமான அணுக்கத்தைக் கொண்டிருப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான வேறேதேனும் தகவல்:-
7. எந்த ஆளுக்கு அறிவிப்பு வழங்கப்படுகின்றதோ அந்த ஆளின் அடையாளம்:-
8. அறிவிப்பு வழங்கப்பட்ட தேதியும் இடமும்:-
9. அறிவிப்பை வழங்கும் அலுவலரின் பெயரும், பதவிப்பெயரும், கையொப்பமும்:-

## மூன்றாம் அட்டவணை

[பிரிவு 19(3)]

### கைதுசெய்யப்பட்டமைபற்றி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கான அறிவிப்பு

1. கைதுசெய்யப்பட்ட ஆளின் பெயர்:-
2. கைதுசெய்யப்பட்ட தேதியும், நேரமும், இடமும்:-
3. கைதுசெய்தமைக்கான காரணங்கள்:-
4. சந்தேகநபர் தடுப்புக்காவலில் வைத்திருக்கப்படுகின்ற இடத்தின் அமைவிடம்:-
5. கைதுசெய்யும் அலுவலரின் பெயர், அடையாளங்காண் இலக்கம் மற்றும் பதவிவரிசை:-
6. தடுப்புக்காவல் இடத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரின் பெயரும் பதவிப்பெயரும் அவரது தொடர்பு விபரங்களும்:-
7. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு-

(அ) சந்தேகநபருக்கான உடனடி அணுக்கத்தைக் கொண்டிருப்பதற்கும்; அத்துடன்

(ஆ) அத்தகைய கைதுசெய்தலும் தடுப்புக்காவலும் சந்தேகநபரின் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளனவாவென்பதை நிச்சயிப்பதற்கும்,

ஆன வேறெவையேனும் தகவல்கள்.

## நான்காம் அட்டவணை

[பிரிவு 19(3)]

### கைதுசெய்தமைபற்றிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்கான அறிவிப்பு

1. கைதுசெய்யப்பட்ட ஆளின் பெயர்:-
2. கைதுசெய்யப்பட்ட தேதியும், நேரமும், இடமும்:-
3. கைதுசெய்தமைக்கான காரணங்கள்:-
4. சந்தேகநபர் தடுப்புக்காவலில் வைத்திருக்கப்படுகின்ற இடத்தின் அமைவிடம்:-
5. கைதுசெய்யும் அலுவலரின் பெயரும், அடையாளங்காண் இலக்கமும் மற்றும் பதவிவரிசையும்:-
6. தடுப்புக்காவல் இடத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரின் பெயரும் பதவிப்பெயரும் அவரது தொடர்பு விபரங்களும்:-

## ஐந்தாம் அட்டவணை

[பிரிவு 21 (2)]

### தடுத்துவைத்தற் கட்டளை

1. தடுத்துவைத்தற் கட்டளையின் இலக்கம்:-
2. தடுத்துவைத்தற் கட்டளை வழங்கப்பட்ட தேதியும் இடமும்:-
3. தடுத்துவைத்தற் கட்டளையின் வழங்குகையைக் கோரிய அலுவலரின் அடையாளமும், கோரிக்கைத் தேதியும், ஏற்புடையற்பாலவிடத்து குறிப்பீட்டிலக்கமும்:-
4. எந்த ஆள் (சந்தேகநபர்) தொடர்பில் தடுப்புக்காவல் அதிகாரமளிக்கப்படுகின்றதோ அந்த ஆளின் (சந்தேகநபரின்) பெயர்:-
5. சந்தேகநபர் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் பொலிசு நிலையம்:-
6. தடுப்புக்காவற் காலப்பகுதி:-
7. எக்காரணங்களுக்காகச் சந்தேகநபரின் தடுப்புக்காவலுக்கு அதிகாரமளிக்கப் பட்டுள்ளதோ அக்காரணங்கள்:-

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களம்.